JAFFNA LIBRARY


# புதியவன்

PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்–உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 100 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 18 ஞாயிறு, 01/06/2014 (TP- 0233238444)

www.putheyavan.com



**நித்திலம் பதிப்பகம்**

#87 பிரதான வீதி, சின்னக்கடை மன்னார்.

*டிஜிட்டல் பிறின்ரிங் (Banner & Sticker)
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.

தொலைபேசி:- 023-2223545, மின்னஞ்சல் :- nithithilam31@gmail.com


## மோடியின்ஆலோசகராக ஜெயசங்கர்



(புதுடெல்லி)

பிரதமர் நரேந்திர மோடியின் வெளியுறவு விவகாரங்களுக்கான ஆலொசகராக அமெரிக்காவுக்கான இந்திய தூதரான சுப்பிரமணியம் ஜெய் சங்கர் நியமிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

இவர் இந்திரா காலத்தில் இலங்கைக்கான சிறப்பு பிரதிநிதியாக இருந்த ஜி. பார்த்தசாரதியின் கீழ் பணிபுரிந்தவர். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி காலத்தில் இலங்கை விவகாரங்களுக்கு என்று தனியே

(11ம்பக்கம்பார்க்க)

# மோடியின் கோரிக்கைக்கு ராஜபக்ச இணங்குவாரா ?



இலங்கை தமிழர் பிரச்சினை தீர்க்க இந்தியாவின் உதவியை பெற இலங்கை என்ன செய்ய வேண்டும் என்பதை இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி மிக தெளிவாக கூறியுள்ளதாக முன்னாள் இராஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழர்களுடனான அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும்

(11ம்பக்கம்பார்க்க)


**புதியவன் 100வது பயணத்தில் இன்று**

### மகிந்தவின் கோரிக்கையை நிராகரித்த சந்திரிக்காவின் புதல்வர்!

**(கொழும்பு)**முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் விமுக்தி குமார துங்கவுக்கு அத்தனகல்ல தொகுதியை வழங்கி அவரை அரசியலுக்கு கொண்டு வர ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சித்து தோல்வியடைந்துள்ளதாக தெரியவருகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அத்தனகல்ல தொகுதியை பொறுப்பேற்று அரசியலுக்கு வருமாறு ஜீறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் மூலம் விமுக்தி குமாரதுங்கவை வலியுறுத்தி வருவதாக கூறப்படுகிறது.

(11ம்பக்கம்பார்க்க)




PUBLIC LIBRARY JAFFNA.

### இலங்கை பாரியளவில் போசாக்கு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது

இலங்கை பாரியளவில் போசாக்கு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர்களுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது. சிறுவர்களும் பெண்களும் பாரியளவில் போசாக்கு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது. இரும்புச் சத்து குறைபாட்டினால் ஏற்படக் கூடிய அனிமியா என்னும் நோயினால் அதிகளவான பெண்களும் சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மூன்றில் ஒரு சிறுவர்களும், நான்கில் ஒரு பெரியவர்களும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாலர் பாடசாலை செல்லும் மாணவ(11ம்பக்கம்பார்க்க)

## டென்மார்க்கில் இன அழிப்புக் காட்சிகளைக் கண்டு கண்ணீர் விட்ட வேற்றின மக்கள்

(டென்மார்க்) டென்மார்க்கின் கொல்பேக் நகரத்தில் மே-18 முள்ளிவாய்க்கால் கவனயீர்ப்பு நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றுள்ளன.கொள்ப்பார்க் நகரத்ததில் நடைபெற்ற நிகழ்வில் பல ஆயிரக்கணக்கான டெனிஸ் மற்றும் வேற்றின மக்கள் இன அழிப்புக் கோரக் காட்சிகளைக் கண்டு கண்ணீர் விட்டனர். உலகில், அநாகரீகமாகவும் காட்டுமிராண்டித் தனமாகவும் மனித நேயம் அறவே அற்ற, இரத்த வெறிபிடித்த, கொடிய சிறீலங்கா அரசைக் கண்டிக்கத் தவறிய, ஐ.நா.வையும் கடுமையாக விமர்சனம் செய்தார்கள்.

மானிட வரலாற்றில் இப்படி ஒரு இனப்படுகொலை இதுவரை நிகழ்ந்ததில்லை. இது மிகவும் (11ம்பக்கம்பார்க்க)

## இரணைமடு விவகாரம் கடும் வாத பிரதிவாதத்தில் முடிந்தது

**(கிளிநொச்சி)** கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இரண்டாம் நாள் நேற்று இணைத்தலைமைகளான வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் வடமாகாண எதிர்க்கட்சி தலைவர் தவராசா நேற்றுமுன்தினம் நடந்த கூட்டம் தொடர்பாக ஊடகங்கள் திரித்து செய்திகளை வெளியிட்ட தாகவும் ஊடகங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென கேட்கவும் குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீளவும் தானும் வலியுறுத்துவதாக .

(11ம்பக்கம்பார்க்க)

## கழுதையை விட அறிவு குறைந்தவர் அஸ்வர்



**(கொழும்பு)** ,புத்தளத்தில் இருக்கும் அறிவு குறைந்த கழுதையை விட அறிவற்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் இருப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் அந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்றத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும் உறுப்பினர்களும் உள்ளனர். அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களும் உள்ளனர்.

ஆளும் . (11ம்பக்கம்பார்க்க)

## சிங்கள இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி

**(கொழும்பு)**மாதுளுவாவே சோபித தேரரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்த தமது ஒத்துழைப்பு வழங்கப்படும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்க சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

இணையக்கள (11ம்பக்கம்பார்க்க)


24X7 மணிநேர முதன்மை செய்திகளுடன்..

www.putheyavan.com http://www.

அரசியல்,சினிமா,அழகு,திரைவிமர்சனம்,விநோதம் போன்ற சுவையான அம்சங்களுடன்.

உள்ளதை உள்ளபடி....

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை........

# மன்னாரில் புகைத்தலுக்கு எதிராக ஊர்வலம் மனம்மாறுமா இளைய சமுதாயம் ?



(அலுவலகச்செய்தியாளர்)
உலக புகைத்தல் எதிர்ப்பு தினமான நேற்று (31) மன்னாரில் புகைத்தலுக்கு எதிரான விழிர்ப் புனர்வு ஊர்வலம் ஒன்று இடம் பெற்றது.

-மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பா ட்டில் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் மன்னார் கிளையின் அனுசரனையுடன் குறித்த விழிர்ப்புனர்வு ஊர்வலம் இடம் பெற்றது.

இவ் ஊர்வலம் காலை 9 மணியளவில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு முன் ஆரம்பமாகி பிரதான வீதியூடாக சென்று மன்னார் வைத்தியசாலை வீதியை சென்றடைந்தது.

-அங்கிருந்து மன்னார் பஸார் பகுதியூடாக ஊர்வலம் மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

ஊர்வலத்தில் -மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.றோய் பீரிஸ், இலங்கை செஞ் சிலுவைச்சங்கத்தின் மன்னார் கிளை அதிகாரிகள் செஞ்சிலுவை ச்சங்க தொண்டர்கள், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பணியாளர்கள் ,பாடசாலை மாணவர்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் குறித்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட தோடு புகைத்தலுக்கு எதிரான பதாதைகளை ஏந்தியவாறு கலந்து கொண்டனர்.



# சீரற்ற ஏ 14 வீதிப் புனரமைப்பு

(அலுவலகச்செய்தியாளர்)
ஏ14 வீதியினது மடுவீதிச் சந்தியிலிருந்து முள்ளிப்பள்ளச் சந்திவரையான வீதி புனரமைப்பு வேலையானது கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வருகின்றது. இதன் முதற்கட்டமாக அளவை வேலைகள் நடைபெற்றன. இதன்போது சில பாலங்களின் புனரமைப்பு வேலைகளும் நடைபெற்றன.

MAGA, VVKஎன்ற இரு கம்பனிகள் இவ்வேலைகளை மேற்கொள் கின்றன. பொதுவாக பாதையின் இரு பக்கத்திலுமாக 50 அடிக்கு பாதைப் புனரமைப்புக்கு அரசாங்கத்திற்கு காணி தேவைப்படலாம் என்ற நோக்கோடு சில இடங்களில் RDA என கற்களால் அடையாளப் படுத்தப் பட்டுள்ளன. இக்கற்கள் தனியார் காணிகளுக்குள்ளும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

இவை இவ்வாறு இருக்கும் போது பனரமைப்புச் செய்யப்படும் வீதியில் சில சிறியவளைவுகள் நோக்கப்படுவதும் சிலவளைவுகள் சாரதிகளுக்கு இலகுவாக இருக்கும் வண்ணம் அதன் வளைவுகளில் சிறியளவில் மாற்றம் செய்வது முண்டு.

இதன் ஒருகட்டமாக சோலை முடக்கு வளைவுஎனப்படும் மழுவராயர் கட்டையடம்பன் பாடசாலைக்கு முன்னுள்ள வளைவு நேராக்கப படுவதாகவும் அதிகாரிகள் பேசிக் கொண்டார்கள். அதற்கானமஞ்சள் நிறத்திலானபொலித்தீன் உறையிட்ட தடிகள் அங்குஅடிக்கப்பட்டது. இதைக்கண்டுகிராமமக்கள் உட்பட வீதியினால் பயணிக்கும் அனைத்து மக்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். இத்துடன் இவ்வாறு எல்லையிடப்பட்ட காணி அரச வெற்றுக் காணி யாகவும் காணப்பட்டது. ஆனால் தற்போது அப் பாதையின் வளைவு நேராக்கும் முயற்சிகை விடப்பட்டுள்ளது. பாதை ஏற்கனவே உள்ளவாறு செப்பனிடத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

. இவ்விடமாற்றங்கள் உதாரணமாக இரட்டைக்குளம் ரயில் கடவையில் இருந்து 12ம் கட்டைரயில் கடவை வரையில் பாதைக்கு சமாந்தரமாகவும்,அருகிலும்,ரயில் பாதையின் தெற்குப்புறம் பாதை யோரம் ரயில்பாதையின் தடுப்புச்சுவர் உள்ளதாலும் இதற்கிடையில் அமையப்பெறும் பாதையின் மையக் கோடு இடம்மாறுவது தவிர்க்க முடியாதது.

ஆனால் அதன் ஒருபகுதியாகிய 11ம் கட்டைவாய்க்கால் சந்தியில் இருந்து முள்ளிப்பள்ளம் வரைநோக்கு வோமாயிருந்தால் பலநேரான இடங்களில் முழுமையாக ஏதோ ஒருபக்கத்திற்குமையக்கோடு இடம் மாறியுள்ளது.

அத்துடன் அதனிடணிணைந் தவளைவுகளும் அதற்கிசைவான வகையில் அமையவில்லை. என்பதனை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

VVK நிறுவனம் இன்னும் ஆரம்பிக்கவில்லைஎன்றும், இதற்கான காரணம் முதற்கட்ட அளவையில் ஏதோசிக்கல் உள்ளதா கவும் பரவலாகப் பேசப்படுகின்றது. தற்போது பாதையின் நடுக்கோடு அதை துல்லியமாக நிரூபிப்பதாகவும் உள்ளது.

இப் பாதையின் இன்னுமொரு வளைவுபகுதியானகள்ளியகட்டைக்காட RDA Guest House இல் இருந்து சைனாகாபர் கட்டிடத் தொகுதிவரை அவதானிப்போமாயின் வீதியின் மையக்கோடுகளானது முற்று முழதாக வலப்பக்கமாக இடம் மாறியுள்ளன.



அத்துடன் பல இடங்களில் பழைய வீதியின் மையப்புள்ளியில் இருந்து புனரமைக் கப்படுகின்ற வீதிபாரிய அளவில் இடம் மாறுவதை (Shifting) அவதானிக்கப்படக்கூடியதாகஉள்ளது (Shifting). இது சிறுநாவற்குளச் சந்தியின் மையப் பகுதியிலிருந்து மன்னார். பக்கமுள்ள பெரிய வளைவுவரை [illegible] இல்லாதஒருநேர் பாதை.

அதேபோல் கள்ளிகட்டைக்காட்டுப் பக்கம் பொலிஸார் வாகனம் மறிக்கும் இடம் வரையும் எந்தவிதவளைவும் இல்லை. இவ்விரண்டு பழைய நடுக்கோட்டையும் (நடுப்பகுதியை) வைத்து இவ்விடத்தில் வளைவு அமைப்பதும் தற்போது இடப்பட்டுள்ள புதியவளைவும் ஒரேஅமைப்பை உடையது.

[illegible]கருத்தாகும். அத்துடன் தனியாரின் ஒருபக்கக் காணிபாதிக் கப்படுகின்றது. இதன் மறுபக்கத்தை நோக்கினால் பறைவைகள் சரணாலயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியாகக் காணப்படுகின்றது. எனவேமையக கோட்டுமாற்றம் அடுத்தபக்கத்திற்குவந்திருந்தால் அதுஅரசகாணியாகும்.

எவ்வளவு தூரமும் செல்லலாம். நேராகவும் கூட ஆக்கலாம். பாதைகள் புனரமைக்கப் படுவதனை நாம் வரவேற்கின்றோம்.

# வங்காலை கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைக்கப்படுமா ?

(அலுவலகச்செய்தியாளர்)
மன்னார் மாவட்டத்தின் அதிக மக்கள் தொகையும் கல்வியுடன் கூடிய நெறியாளரையும் தன்னகத்தே கொண்ட வளர்ச்சிப் பெற்று வரும் வங்காலை கிராமத்தில் வங்காலை வடக்கு கிழக்கு மேற்கு தோமஸ்புரி அக்னேஸ்புரம் ஆனாள்நகர் என பல பிரிவுகளைக் கொண்ட கிராம அபிசிருத்திச் சங்கங்கள் மகளீர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் எனபன செயற்பட்டுவந்தன தற்போது இச்சங்கங்களின் எவ்வித செயற் பாடுகளும் அற்றநிலையில் பெயரளவில் பெயரோடு இருக்கும் சங்கங்களாகவே தோற்றமளிக் கின்றன

இச் சங்கங்கள் மக்கள் அபிவிருத்திக்கா மக்கள் செயற்பாட்டிற்கான எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை இச்சங்கங்களின் முக்கியமான செயற்பாடுகளில் ஒன்று பிரதேச சபையாலோ அல்லது பிரதேச செயலகத்தாலோ வீதி அபிவிருத்திக்கோ அல்லது மதகுகள் அமைப்பதற்கோ அல்லது கட்டி டங்கள் அபிவிருத்திக்கோ நிதிகள் கிடைக்கப் பெறும் போது மட்டும் புதிதாக சிறகு முளைத்து பறக்கும் பறவைகள் போல ஓடி ஆடி வெளியில் திரிவதைக் காணலாம்

தங்கள் சுய நலன்களே அச் செயற்பாடுகளாகும் மக்களு க்காகவே சங்கங்களின் தோற்றமும் அதன் செயற்பாடுகளும் இடம் பெற வேண்டும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாதர் கிராம அபிவித்திச் சங்கங்கள் இருக்கின்றனவா என்ற கேள்வி கிராம மக்களிடம் மேலோங்கி நிற்கின்றன சங்கங்க ளின் பதவிக்காலம் இரண்டு வருடங்களாகும் ஆனால் இச்சங்கங்களின் பதவிக்காலத்தையோ (7வருடங்கள்) அல்லது அதன் செயற்பாடுகயையோ கேட்பதற்கு யாருமற்ற நிலை ஏட்பட்டுள்ளது

பலவருடகாலமாக கலைக்கப்பட்டு புதியநிர்வாக சபை செய்யபடாமலும் புதிய செயற்பாட்டாளர்கள் உள்வாங் கப்படாத நிலை தொடர்கிறது கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்படுகிறது தலைமைத்துவம் வகிப்பவரின்

பெயருக்கும் புகழுக்கும் அல்ல அத்துடன் சங்கங்கள் மூலமே தமது வாழ்வு என்ற கோட்பாட்டுடன் தொடர்ச்சியாக வருடக்கணக்கில் தலைமை வகிப்பவரின் வாழ்வுக்காக அல்ல சங்கங்கள் மக்களுக்காகவே மக்களின் மேம்பாட்டுக்காகவே செயற்படுவன தலைமைத்துவ தெரிவுகளுக்கு பிறகு வங்காலை சங்கங்கள் மாதாந்த கூட்டத்தையோ வருடாந்த கூட்டத்தையோ நடாத்துவதில்லை நிதி அறிக்கைகள் செவ்வை பார்க்கப்படுதில்லை மக்களின் தேவைகள் பற்றி அறிக்கையிடுவதில்லை

வங்காலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வங்காலை மேற்கு கிராம அபிவிருத்திசங்கம் வங்காலை மேற்கு மகளீர் கிராம அபிவிருத்திச்சங்கம் வங்காலை கிழக்குகிராம அபிவிருத்திச்சங்கம் வங்காலை கிழக்கு மகளீர் அபிவிருத்திச்சங்கம் அக்னேஸ்புரம் கிராம அபிவிருத்திச்சங்கம் ஆனால் நகர் கிராம அபிவிருத்திச்சங்கம் தோமஸ்புரி கிராம அபிவி ருத்திச்சங்கம் இவ்வாறான அமைப்புகள் செயற்படாமல் இயங்காமல் இருந்து வருகிறது

இந்நிலைக்கு முற்றப்புள்ளி வைக்கப் படுமா? கிராம சேவையாளர்களே சற்று இச் செயற்பாட்டை கவனியுங்கள் சம்மந்தப்பட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரே சங்கங் களுக்கு புத்துயீர் அளியுங்கள் சங்கங்களின் வளம் செயற்பாடுகள் இயக்கப்பட்டு வங்காலை கிராமம் வளர்ச்சி பெற உதவுங்கள் என சமுதாய ஆர்வலர்களால் வேண்டு கோள்விடுக் கப்பட்டுள்ளது

# மதவழிபாட்டை தடுத்தவர்களை உடன்கைது செய்யுமாறு பொலிசாருக்கு நிதிமன்றம் உத்தரவு

(அலுவலகச்செய்தியாளர்)
யாரும் விரும்பிய கடவுளை வழிபடவோ விரும்பிய மதத்தை பின்பற்றவோ சுதந்திரம் உண்டு அது அவர்களுடைய உரிமையாகும் அந்த உரிமை அரசியலமைப்பினால் உறுதிப் படுத்தப் பட்டுள்ளது அரசியலமைப பினால் உறுதிப்ப டுத்தப்பட்ட விடயங்களை பேணிப் பாதுகாக்க வேண்டியது பொலிசாரின் கடமையாகும் அதனை விடுத்து பொலிசார் எழுந்தமானமாக செயற்படமுடியாது

இவ்வாறு தெிவித்தார் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மன்னார் நீதிவான் நீதிமன்றில் மடு குஞ்சுக்குளம் பகுதியில் ஏற்பட்ட மதப்பிரச்சனை தொடர்பான வழக் கொன்றிலேயே நீதவான் இவ்வாறு தெரிவித்தார்

கடந்த 21.05.2014அன்று மடு பகுதியிலுள்ள குஞ்சுக்குளம் மாதாகிராமம் என்னுமிடத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த றோமன் கத்தோலிக்க மதத்தை சாராத மதகுரு ஒருவரும் வேறு பலரும் அவ்வூரைச் சேர்ந்த கத்தோலிக்க மதப்பிரிவினரால் கடுமையாக தாக்கப்பட்டனர் இதன்போது வவுனியாவிலிருந்து வந்திருந்த மதகுருவின் வாகனமும் அடித்து நொருக்கப்பட்டது

ஆலயமணியை ஒலிக்கச்செய்து கோயிலில் கூடிய கத்தோலிக்க மதப்பிரிவினராலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது எனினும் இது தொடர்பாக மடுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் பொலிசார் உடனடியாகதாக்கியவர்களை கைது செய்து நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை

இதனைத் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் கழிந்த நிலையிலேயே பொலிசார் நீதிமன்றில் முதல் அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர் இவ் வழக்கு விசாரனைக்கு எடுக்கப்பட்ட இதன் போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களான சுகதபால வங்கநாத மற்றும் மடுப் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரியான குணசேகர என்பவர்களை மன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டி ருந்தது பொலிசாரின் நடவடிக்கைகள் மன்றிற்கு திருப்தியளிக் கவில்லையென்றும் உடனடியாக சந்தேக நபர்களை கைது செய்து முற்படுத்துமாறும் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார்

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான திருவருள் அகஸ்ரின் என்பவர்களும் பாதிக்கப் பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணி டயசும் முற்பட்டனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன்
PUTHEYAVAN
இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

# புதியவன் பயணம்

ஊடகப்பயணம் என்பது சவால் மிகுந்த பயணமே என்பது எவருக்கும் இரு கருத்து நிலை எழமுடியாது

எனவே புதியவன் தனது தினசரி பதிப்பில் இன்று நூறாவது நாளில் பயணிக்கிறான் கடந்துவந்த நாட்களில் கற்றுக் கொண்டவையும். அதனால் பெற்றுக்கொண்ட அறிவும் தெளிவும் ஏராளம்.

இலங்கை போன்ற கருத்துச்சுதந்திரமில்லாத நாட்டில் ஊடகப்பணி புரிவதோ ஒரு ஊடகத்தை நடாத்துவதோ சர்வசாதண விடயமல்ல அதிலும் எதுவித அடிப்படை வசதிகளும் இல்லாத மன்னார் போன்ற மாவட்டத்தில் இருந்து ஒரு பத்திரிகை நடாத்துவது ஒன்றும் எளிதான விடயமல்ல

வாரமலர் நடாத்துவது மிகவும் இலகுவான விடயம் அதை வசதியுள்ள இடத்தில் இருந்து வெளியிடுபவர்கள் கூட சிரமப்படும்போது மன்னாரில் இருந்து நாளிதழ் வெளியிடுவது மிகச்சிரமமானதே

கடந்த 100 நாட்களுக்குள் பல சவால்களை எதிர் கொண்டோம் அதிலும் உண்மையான விடயங்களை செய்திகளாக பிரசுரிக்கும் போது நாம் சந்தித்த நெருக்கடிகள் ஏராளம் அதனால் காவல்த்துறை வரையும் போகவேண்டிய நிலையும் ஏற்பட்டதுடன் தினமும் ஏதாவது ஒரு செய்தி தொடர்பில் முரன்நடை ஏற்பட்டவாறே இருக்கும்

இவை ஊடகப்பணியில் தவிர்க்கமுடியாதவை தான் ஆனால் இவற்றைக்கண்டு நாம் அஞ்சிவிடுவதில்லை அஞ்சப்போவதும் இல்லை
பத்திரிகை தர்மீகத்துடனும் சமூகப் பொறுப்புடனும் பக்கச்சார்பின்றி எவருக்கும் சாராமல் எவருடனும் சேராமல் உள்ளதை உள்ளபடி தகுதி நிலை கடந்து செய்தி பிரசுரித்து வருகிறோம்

என்பதை யாரும் மறுக்க முடியாது இயலளவுக்கும் தேசிய பத்திரிகை களுக்கு நிகராக செய்தி வெளியிடுகின்றோம் எனப்பலரும் எமக்கு விமர்சனம் எழுதியுள்ளார்கள்

எனவே இந்த முயர்ச்சி என்பது வியாபார நோக்கமல்ல அல்லது புகழ்தேடும் எண்ணமும் அல்ல உண்மைகள் உறங்கிவிடக்கூடாது என்பதே எமது அடிப்படை இலக்கு பல்வேறு விதமான பெருளாதார நெருக்கடியின் மத்தியிலும் இந்த சேவையைத் தொடர்கின்றோம் என்பது குறிப்பிட்டுக்காட்ட வேண்டிய ஒன்றாகும்

ஆகவே எம்மை பாராட்டி ஊக்கம்தந்து உற்சாகப் படுத்தியவர்களுக்கும் உண்மைச் செய்திகளால் எம்மை எதிர்த்தவர்களுக்கும் நிறைவான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்
போட்டிமிகு ஊடகப்பயணத்தில் புதியவனை ஏற்றுக் கொண்ட வாசகர்களுக்கும் விற்பனை முகவர் களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்

தொடர்ந்தும் உங்கள் ஆதரவும் அரவணைப்பும் எமக்குத் தேவை அதில் உங்களுக்கு இருகருத்து நிலை இருக்காது என்பதை நம்புகின்றோம் எனவே கடந்துவந்த பாதைக்கு ஒத்தடமிட்ட அத்தனை பேருக்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களும்




⇨ கூட்டமைப்பின்ர அஞ்சா நெஞ்சம் வீரச்சிங்கம் தம்பி சயந்தனின்ர பொடியள் போட்டுப்பிடிச்சதில கனக்கப்பேருக்கு மண்டை உடைஞ்சுப்போயிட்டுது. விசயத்தை அடக்கி வாசிக்க தான் தம்பி தலையால நடந்து போராடினவர். ஆனால் விசயம் லீக் ஆயிட்டுது. ஏற்கனவே தம்பியில முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை குழப்ப வெளிக்கிட்ட குற்றச்சாட்டு இருந்தது. எங்கேயென்று பார்த்துக்கொண்டிந்து ஆப்பு இறுக்கியாச்சு. இனி ஆடிப்பாருங்கோவன்.

⇨ வடக்கு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்மாரை குழப்பிக் கொண் டிருக்கிறதாக மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் பற்றி பெயர் பட்டியலொன்று வெளிவந்து பேப்பர்காரர் கைகளில உலாவுது. பாராளுமன்றத்தில் கூட்டமைப் பின் பின்கதவு எம்பியால தான் கனக்க குழப்பமெண்டால் மாகாணசபையிலயும் பின்கதவு உறுப்பினரொருத்தர் பற்றி கதை அடிபடுகுது. இன நல்லிணக்கத் திற்காக சீற் கொடுத்த ஆளொருத்தர் தான் இப்ப கன இடங்களில கல்லு குத்திக்கொண்டு திரியிறதாக கேள்வி. ஏற்கனவே கூட்டமைப்பு மாகாணசபை நிர்வாகம் நாறுவதாக சனம் குற்றஞ்சாட்ட இப்பிடிப்பட்ட ஆட்களையும் சேர்த்து வைச்சால் விளங்கினமாதிரித்தான்.

⇨ அரசாங்கத்தோட இருந்தாலும் ஈபிடிபிகாரர் நல்ல படியாக திட்டம்போட்டு வேலை செய்கினம் பாருங்கோ. அதுக்காக சனத்தின்ர அபிவிருத்திக்கு மினக்கிடுறதாக நீங்கள் நம்பினால் நான் அதுக்கு பொறுப்பில்லை. கூட்டமைப்பை எப்பிடி நாறடிக்கிறதெண்டது தான அவையின்ர வேலைத்திட்டம். யாழ்ப்பாணத்தில மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடக்கிற வேளை கூட்டமைப்பு மாகாணசபை அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சரிற்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாவற்றையும் தூண்டிவிட்டது அவைதானாம். பின்னுக்கு நின்று அவை யளின்ர ஆக்கள் தூண்டிவிட இவங்களோ மற்றக்கதவால தப்பி ஓடியிருக்கிறாங்கள். வாக்களிச்ச சனத்திற்கு முதலில மதிப்பளிக்க பாருங்கோ.

⇨ தமிழ் தேசிய மக்கள் முன்னணிகாரர் கிளிநொச்சியில நடத்தின ஆர்ப்பாட்டம் பிரபாகரனது காலடி மண்பட்ட இடத்தை மீட்க நடந்த போராட்டமெண்டு இராணுவப் பேச்சாளர் புதுவியாக்கியானம் கொடுத்திருக்கிறார். அதாவது தாங்கள் பிடிச்சு வைச்சிருக்கிற இடமெல்லாம் அவரின்ர காலடி பட்ட இடமோவெண்டு கேக்கிறன். போற போக்கில பார்த்தால் பலாலியிலயும் காங்கேசன் துறையிலும் அவர் கூட்டம் போட்டதால தான் பிடிச்சு வைச்சிருக்கிறமெண்டு புது வியாக்கியானம் செய்வினம் பாருங்கோ.

⇨ கெடுகுடி சொல் கேளாதெண்டது . முதுமொழி போற போக்கைப்பார்த்தால் முதலமைச்சரின்ர நிலையும் அப்பிடித்தான் வரும் போல. போற வாற கள்ளன் காடையன் எல்லோரையும் அணைக்கவேண்டாமென்று சொல்ல சொல்ல கேட்காமல் கூட்டி வச்சுக்கொண்டு ஆரெண்டே தெரியாத அவரை மிகப்பெரிய வெற்றி பெறவைச்சு கொண்டாடின ஊடகங்களை இப்ப புறமொதுக்க தொடங்கியிட்டார். விளைவு அவரை இப்ப பரிதாபத்திற்குரிய ஒருவராக ஊடகங்கள் சித்தரிக்க தொடங்கியிட்டுதுகள். அதிலயும் இடப்பிரச்சினையால ஊடகங்களிற்கு தடையெண்டு அவர் விளக்கம் கொடுக்க மூன்று இலட்சம் வாடகை கொடுக்கிற கட்டிடத்தில் ஒரு நிற்கிறதிற்கு ஒரு சின்ன இடம் கூட இல்லையோவெண்டு நாக்கை புடுங்குற மாதிரியெல்லோ கேள்வி கேட்கிறாங்கள்.

⇨ ஆமிக்கு ஆள்பிடிக்க வந்து இறங்கினவை கத்தி தீர்த்தும் ஒன்றும் நடக்கிற மாதிரியில்லை. யாழப்பாணத்தில முப்பதும் முல்லைதீவில 39 பேரையும் தான் ஆள்சேர்த்தவை. கடைசியில இப்ப ஆள்பிடிச்சு தரச்சொல்லி விதானைமாரிட்டை வந்து நிற்கினம். ஆளுக்கு ஒரு ஆளை பிடிச்சு தரச்சொல்லி விதானைமாருக்கு ஆமி அதிகாரிகள் ஓடர் போட்டிருக்கினமாம். அதில அரசாங்க அதிபர் சுந்தரம் ஐயாதான் இடைத்தரகரெண்டு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கூட்டமைப்பு எம்பிமார் போட்டு கிழி கிழியெண்டு கிழிச்சுப்போட்டாங்கள் பாருங்கோ. ஆள் என்ன சொல்லியதெண்டு தெரியாமல் அங்கை பேந்த பேந்த முழிக்க அங்கை அமைச்சர் தான் காப்பாற்றினவராம்.அதில ஆள்சேர்ப்பை நியாயப்படுத்தி அவற்றை கட்சிகாரர் குரலெழுப்பி தங்களை வெளிக்காட்டிப்போட்டினமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயப்பானை

மலை அடிவாரத்தில் அந்தச் சிறுவனின் வீடு இருந்தது. அவனுக்கு அப்பா இல்லை. அப்பா இருந்தபோது நிறைய சொத்து இருந்தது. இறந்தவுடன் அந்தச் சொத்தை எல்லாம் மலையின் உச்சியில் இருந்தவர் ஏமாற்றி எடுத்துக் கொண்டார். அவர்களிடமிருந்தது ஒரே ஒரு "பசு" மட்டும் தான். அம்மாவும் மகனும் சாப்பாட்டுக்கே சிரமப்பட்டனர்.

மகனை அழைத்துச் சொன்னார். இந்தப் பசுவை அருகிலுள்ள நகரத்தில் விற்றுவிட்டு வா, என்று அனுப்பினார். சிறுவன் மாட்டின் கழுத்தில் கயிறு கட்டினான். கயிற்றைப் பிடித்துக்கொண்டு நகரத்துக்கு கூட்டிப்போனான். வழியில் ஒரு மனிதனை சிறுவன் சந்தித்தான். அந்த மனிதன் துணியால் மூடிய ஒரு பொருளை வைத்திருந்தான். அந்த மனிதன் "எங்கேயப்பா போகிறாய் என்று கேட்டார்.

"இந்தப் பசுவை விற்பதற்காகப் போகிறேன்,"என்றான். "ஓ!அப்படியா, அப்ப பசுவை எனக்கு விற்கிறாயா?" என்று கேட்டார் அவர். "நீங்கள் எவ்வளவு தருவீர்கள்?"என்றான் இவன். "இந்த வெள்ளிப் பானையை உனக்குத் தருகிறேன்," என்றார் அவர்.

"பசுவிற்குப் பதிலா பானையா? நான் தரமாட்டேன்,"என்றான் சிறுவன். அப்போது ஒரு மெல்லிய குரல் கேட்டது, சிறுவனுக்கு. "என்னை வாங்கிக்க, என்னை வாங்கிக்க,"என்று பானையில் இருந்து குரல் வந்தது. உடனே சிறுவனும் பசுவை அந்த மனிதரிடம் கொடுத்தான். பானையை வாங்கிக்கொண்டான். பசுவோடு போனவன் பானையோடு வீட்டுக்கு வந்தான்.

"பசுவை எவ்வளவுக்கு விற்றாய்?," என்று கேட்டார் அம்மா. "இதோ இந்தப் பானையை வாங்கி வந்தேன்," என்றான். "உனக்கு மூளையே இல்லையா? யாராவது பானைக்காக பசுவை விற்பார்களா? வெறும் பானையை வைத்து என்ன செய்வது? என்று சத்தம் போட்டார், அவன் அம்மா. அந்தப்பானையை வாங்கி வெளியே வீசப்போனார். அப்போது என்னை அடுப்பில் வைத்து தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வையுங்கள், என்றது பானை. பானை பேசியதைப் பார்த்த அம்மாவுக்கு ஒரே ஆச்சரியம். பானை சொல்லியபடி அடுப்பில் வைத்து தண்ணீர் ஊற்றினார். அடுப்பை மூட்டி எரிய விட்டார். தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தது.

"இப்ப நான் போய் உங்களுக்கு சாப்பிடக் கொண்டு வருவேன்," என்றது பானை. பானை காற்றில் அப்படியே பறந்து மலை உச்சிப்பக்கம் போனது. மலை உச்சியில் உள்ள பணக்காரர் வீட்டு சமையல் அறைக்குப் போனது பானை. பணக்காரர் மனைவியோ பலகாரங்களைச் சுட்டு, வைக்க பாத்திரம் தேடிக் கொண்டிருந்தார். இந்தப் பாத்திரம் எங்கிருந்து வந்தது? என்று யோசித்தார் அந்தம்மா. பானை நல்லாத்தான் இருக்கு என்று செய்த பலகாரங்களை எல்லாம் அந்தப் பானைக்குள் வைத்தார். அதை நன்றாக ஒரு மூடியை வைத்து மூடினார். பணக்காரக் கணவரைச் சாப்பிட அழைக்கப் போனார்.

பானை காற்றில் மிதந்து மலை அடிவாரத்தில் உள்ள சிறுவன் வீட்டுக்கு வந்துவிட்டது. அம்மாவும் மகனும் விதவிதமான பலகாரங்களை ருசித்துச் சாப்பிட்டனர். அடுத்த நாள் காலையில் பானை சொன்னது. என்னை அடுப்பில் வைத்து தண்ணீர் ஊற்றி கொதிக்க விடுங்கள் என்று. அதேபோல சிறுவனின் அம்மா செய்தார்.

தண்ணீர் கொதிக்க ஆரம்பித்ததும் காற்றில் மிதந்தவாறு பானை வெளியே போனது. மலை உச்சியில் பணக்காரரின் ஆட்கள் கோதுமை அறுவடை செய்து கொண்டிருந்தார்கள். கோதுமையை பிரித்து ஓரிடத்தில் குவியலாக வைத்திருந்தனர். அந்த இடத்திற்குப் போனது பானை. பானை பெரிய பானையாக தன்னை மாற்றிக்கொண்டது. அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர் அந்தப் பானையில் கோதுமையை எடுத்துக் கொட்டினார். மூட்டைக் கணக்கில் கொட்டிக் கொண்டே இருந்தார். பானைக்குள் எட்டிப்பார்த்தால் இடம் இருந்து கொண்டே இருந்தது. அங்கிருந்த கோதுமை எல்லாம் இப்போது பானைக்குள்!
அந்த வேலையாள் அங்கிருந்து போனார். உடனே பானை காற்றில் மிதந்து சிறுவனின் வீட்டிற்கு வந்து விட்டது. சிறுவனின் அம்மா, அந்தக் கோதுமையில் பலகாரங்கள் செய்தனர். ரொட்டி செய்தனர். பானையிலிருந்த கோதுமையை அங்கிருந்த தானியக் கிடங்கில் சேமித்தனர். அந்த வருடத்துக்குப் போதுமான கோதுமை அது.

மறு நாள் காலையில் பானை, தண்ணீர் ஊற்றி கொதிக்க வைக்கச் சொன்னது.
சிறுவனின் அம்மா அப்படியே செய்தார். தண்ணீர் கொதிக்கத் தொடங்கியதும் பானை காற்றில் மிதந்து வெளியே போனது. பணக்காரர் கட்டுக்கட்டாக பணத்தை வைத்து எண்ணிக் கொண்டிருந்தார். பானை அங்கே போய் இருந்து கொண்டது. மற்றொரு அறைக்குப் போய் அங்கிருந்த பணத்தை எல்லாம் எடுத்து வந்தார். இனி இந்தப் பணத்தை எல்லாம் ஒரே இடத்தில் வைக்க வேண் டும் என்று நினைத்தார். அப்போதுதான் அந்தப் பானையைப் பார்த்தார், பணக் காரர்.

அடடே, இந்தப் பானையில் எல்லாப் பணத்தையும் வைக்க வேண்டியதுதான் என்று நினைத்துக்கொண்டார். தன் முன் இருந்த பணத்தை எல்லாம் பானைக்குள் எடுத்து அடுக்கினார். பணத்தை வைக்க வைக்க இடம் இருந்துகொண்டே இருந்தது. அவரிடம் வேறு பணமே இல்லை எல்லாப் பணத்தையும் வைத்து விட்டார். பணக்காரர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பானை காற்றில் மிதந்து செல்ல ஆரம்பித்தது. பணக் காரர் பானையைத் துரத்திக்கொண்டே ஓடினார். பானை அவரை அங்கு மிங்கு மாக அலைக்கழித்தது. பணக்காரர் கண்ணிலிருந்து மறைந்து சிறுவன் வீட்டிற்கு பானை வந்தது.

"அம்மா, பசுவை யாராவது பானைக்கு விற்பார்களா? என்று கேட்டீர்கள். இப்போது பானைதான் நாம் இழந்ததை எல்லாம் மீட்டுக்கொடுத்துள்ளது," என்றான் மகன். தங்களுக்குச் சொந்தமான பணம் திரும்பக் கிடைத்ததில் அம்மாவும் மகனும் சந்தோசப்பட்டார்கள். மறு நாள் காலையில் பானை, தண்ணீர் ஊற்றி கொதிக்க வைக்கச் சொன்னது. இனி மேல் எதற்கு? எங்களுக்குச் சேரவேண்டியது கிடைத்துவிட்டது. நீ, எங்கும் போக வேண்டாம். எங்களுடனேயே இருந் துவிடு என்று சிறுவனின் அம்மா சொன்னார், பானையிடம்!

"இனி உங்களுக்கு நான் தேவைப்பட மாட்டேன். உங்களை ஏமாற்றி மோசடி செய்தவருக்கு ஒரு பாடம் கற்பிக்கப் போகிறேன். எனவே நான் சொன்னபடி செய்யுங்கள் என்றது பானை. சிறுவனின் அம்மாவும் அப்படியே செய்தார். தண்ணீர் கொதிக்கத் தொடங்கியதும் பானை காற்றில் மிதந்து வெளியே போனது. பணக்காரர் கண்ணில் படும்படியாக பானை போனது. "என் பணத்தைத் திருடிக்கொண்டு போன பானை இது தான்...!" என்று பணக்காரர் கத்தினார். பானையைப் பிடித்து கையை விட்டு பணத்தைத் தேடினார். பணம் தட்டுப்படவில்லை. பணக்காரர் தன் தலையை உள்ளே நுழைத்து பணம் இருக்கிறதா என்று பார்த்தார். பணம் எதுவும் இல்லை. அவரால், தலையை வெளியே எடுக்க முடியவில்லை.

பானை காற்றில் மிதந்து சென்றது. பணக்காரர் ஏதேதோ சொல்லிக் கத்தினார். வெளியே எதுவும் கேட்கவில்லை. பானை காடு, மலை, கடல் எல்லாம் தாண்டிப் போய்க்கொண்டே இருந்தது.

## இன்று

**வைகாசி - 18 ஞாயிற்றுக்கிழமை 01.06.2014**

திதி: சதுர்த்தி பி.இ 5.31
நட்சத்திரம்: புனர்பூசம்

சுப நேரம்: 8.52 - 10.22 வரை
இராகு காலம்: 4.22 - 5.52 வரை
எமகண்டம்: 11.52 - 1.22 வரை



## இன்றைய பலன்

01.06.2014

### வழங்கியவர் மணிகண்டன்




இன்று, எவரிடமும் நட்பு மனப்பாங்குடன் பழகுவீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பு கூடும். வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சிறந்து, திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பெண்களுக்கு அதிர்'டவசமாக, புத்தாடை அணிகலன் வாங்க நல்யோகம் உண்டு.




இன்று, உங்களின் நற்செயலை சிலர் குறை சொல்வர். பொறுமை குணம் பின்பற்றி, சிரம சூழ்நிலையை சரி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். பணவரவை அத்தியாவசிய செலவுகளுக்கு மட்டும் பயன்படுத்துவது நல்லது. தாயின் அன்பு, ஆசி மனதிற்கு ஊக்கம் தரும்.




இன்று, உங்கள் நண்பரிடம், முக்கியமான வி'யம் பேசுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும், கூடுதல் நம்பிக்கையும் உருவாகும். தெய்வ அருளால் தொழில், வியாபாரம் செழிக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள். சுற்றுலா சென்று வர, திட்டமிடுவீர்கள்.




இன்று, கடந்த காலத்தில், உங்களால் பலம் பெற்றவர் உதாசீனமாக நடந்து கொள்வார். பெருந்தன்மையுடன் மன்னித்து, சொந்தப் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நன்மை பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். விற்பனையாளரின் பகட்டான பேச்சை நம்பி, அதிக பயன்தராத பொருள் வாங்க வேண்டாம்.




இன்று, உங்களின் இளமைக்கால இனிய நினைவை, நண்பரிடம் பகிர்ந்து கொள்வீர்கள். வாழ்வில் வளம் பெற, புதிய செயல் திட்டம் உருவாகும். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில், திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.




இன்று, உங்களுக்கு இடையூறு செய்பவரை, அடையாளம் காண்பீர்கள். செயல்களில் முன்யோசனையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மந்தநிலையை கூடுதல் முயற்சியினால் சரி செய்து, சராசரி பணவரவு பெறுவீர்கள். உணவுப்பொருள் தரம் அறிந்து உண்பது நல்லது.




இன்று, உருவாகிற அவசரப்பணி அல்லல் தரலாம். இதனால், சமூக நிகழ்வுகளை அறிவதில் இருந்த ஆர்வம் குறையும். தொழில், வியாபாரத்தில் உள்ள போட்டியை சரி செய்வது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். வி'ப்பிராணிகளிடம் விலகுவது நல்லது.




இன்று, உயர்வான குணம் பின்பற்றி செயல்படுவீர்கள். உறவினர் தாமாக முன்வந்து, சில உதவி வழங்குவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிநிலை ஏற்படும். சராசரி பணவரவுடன், நிலுவைப் பணமும் வசூலாகும். சத்து நிறைந்த உணவுகளை சாப்பிட்டு, உடல் நலம் பேணுவீர்கள்.




இன்று, உருவாகிற அவசரப்பணி அல்லல் தரலாம். இதனால், சமூக நிகழ்வுகளை அறிவதில் இருந்த ஆர்வம் குறையும். தொழில, வியாபாரத்தில் உள்ள போட்டியை சரி செய்வது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். வி'ப்பிராணிகளிடம் விலகுவது நல்லது.




இன்று, உங்கள் பார்வையில் நடக்கிற விஷயங்களில் இருந்து, புதிய அனுபவம் பெறுவீர்கள். மாற்றங்களை செயல்படுத்த, மனம் விரும்பும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை உயர்ந்து லாப விகிதத்தை அதிகரிக்கும். தாராள மனதுடன், சுபச்செலவு செய்து மகிழ்வீர்கள்.




இன்று, நீங்கள் பொது நல எண்ணத்துடன் செயல்படுவீர்கள். நல்லவர்களின் நட்பு எளிதாக கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தேவைகள், பெருமளவில் பூர்த்தியாகும். இ'ட தெய்வ வழிபாடு, சிறப்பாக நடத்துவீர்கள்.




இன்று, சிலர் சொல்லும் அறிவுரை, சங்கடம் உருவாக்கும். அடுத்தவர் மனம் வருந்தாத வகையில், பணிகளை காரணம் சொல்லி விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. நடைமுறை பணச்செலவுக்கு, சேமிப்பு பணம் பயன்படும்.

## சிந்திக்க சில வரிகள்

உன் மனம் வலிக்கும் போது சிரி
பிறர் மனம் வலிக்கும் போது
சிரிக்க வை

சார்லி சாப்ளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA.



# யாழில் மோதல் சம்பவங்களுடன் தொடர்புடைய 40 பேர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மீண்டும் தலைவிரித்தாடும் அடிதடி, வாள்வெட்டு, கோஸ்ரி மோதல் சம்பவங்களை அடுத்து இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்ட 40 பேர் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.எம்.திலகரட்ண தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்தப்பில் கலந்து கொண்டு, கடந்த வாரத்தில் யாழில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பொலிஸாருடைய கைது நடவடிக்கை தொடர்பான புள்ளி விபரங்களை தெரிவித்திருந்தார்.

இப்புள்ளிவிபரங்களில் அடிப்படையிலேயே மேற்படித் தகவலையும் அவர் வெளியிட்டுள்ளார். இதன்படி அவர் மேலும் தெரிவிக்கையில்:- யாழ். பிராந்தியம் மற்றும் காங்கேசன்துறைப் பிராந்தியத்திதற்கு உட்பட்ட பகுதியில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலைங்களில் ஊடாகவும் குற்றச் செயல்களை தடுத்து நிறுத்தி பொது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுதிக் கொள்ளும் விசேட ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி யாழ். பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதியில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஏறத்தாள அரைவாசித் தொகையினராக 40 பேர் வாள்வெட்டு, கோஸ்டி மோதல், அடிதடி போன்ற சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மேலும் இதேபோன்று காங்கேசன்துறைப் பிரிவின் கீழ் உள்ள பொலிஸ் நிலைங்களில் ஊடாக 96 பேர் உட்பட மொத்தமாக யாழ்.மாவட்த்தில் 179 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களில் ஆஜர்செய்யப்பட்டு அவர்களுக்கான தண்டனையும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை, யாழ்.மாவட்டத்தில் தற்போது வீடு புகுந்து கொள்ளையில் ஈடுபடுதல் மற்றும் பகல் கொள்ளை போனற் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் யாழில் 7 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இச் சம்பவுங்கள் தொடர்பாக பொலிஸ் நிலைங்களில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் 15 இலட்சத்தி 55 ஆயிரத்து 850 ரூபா பெறுமதியான தங்க நகைகள், பெறுமதியான பொருட்கள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேற்படிச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களுடைய தகவல்கள் குறித்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்படவில்லை. இதனால் எவரையும் இதுவரையில் கைது செய்யவில்லை. புலனாய்வு ரீதியில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விரைவில் கைது செய்து கொள்ளையிடப்பட்ட பொருட்களும் மீட்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவ புலனாய்வாளர்கள் என்ற போர்வையில் மோசடி கும்பல்கள்

## வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கண்டனம்.

(கிளிநொச்சி)
தற்பொழுது வடக்கில் வாழும் மக்கள் அன்றாடம் மோசடிக்காரர்கள் விரிக்கின்ற சதி வலையில் விழுந்த வண்ணம் உள்ளனர். இவர்கள் இராணுவ புலனாய்வாளர்களின் போர்வைக்குள் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றனர் என வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் 15.05.2014ம் திகதி அன்று ரஞ்சன் என மக்களால் அடையாளம் காணப்பட்ட இராணுவ புலனாய்வாளரும் அவரது குழவினரும் மோசடி தனமாக படகு இயந்திரம் (Yamaha 15) ஒன்றை பலாத்காரமாக அபகரித்துள்ளனர்

புதுமாத்தளனை சேர்ந்த மகாலிங்கம் மனோகரன் என்பவர் இடுப்பிற்கு கீழே இயங்காதவர் ஆவார். பகல் கொள்ளையால் 250000 ரூபா பெறுமதியான படகு இயந்திரத்தை இழுந்துள்ளார். பல தடவைகள் பொலிஸ், இராணுவ முகாம் என அலைந்தும் பலன் இல்லை.

மேற்குறிப்பிட்ட புலனாய்வு குழுவினர் தமது மேலதிகாரிக்கு காட்டிவிட்டு தருவதாக கூறியே படகினை எடுத்துச் சென்றுள்ளனர். மோசடியில் ஈடுபட்டுள்ளவர்களின் தொலைபேசி இலக்கங்கள் 0771853807, 0766765358 என அவர் தெரிவித்தார்.

முல்லை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி இதில் கவனம் எடுப்பாரா? சாட்சிகள் ஆதாரங்களுடன் அலையும் இந்த மாற்று திரனாளிக்கு நீதி கிடைக்குமா? ஓவத்திய கலாநிதி சி.சிவமோகன் ஆதங்கம்.

# வவுனியாவில் மாணவன் மீது ஆசிரியர் தாக்குதல்

வவுனியா நகரை அண்டிய பிரபல கல்லூரியில் தரம்- 11ல் கல்வி கற்கும் மாணவன், அக்கல்லூரியின் ஆசிரியரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த 27ம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவன் அலகு பரீட்சையில் புள்ளிகள் குறைவடைந்தமையால் ஆசிரியர் தாக்கியுள்ளார். எனினும், மாணவன் தொடர்ந்து பாடசாலையில் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக வெளியில் சொல்ல மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், அக்கல்லூரியின் ஒரு சில ஆசிரியர்களின் உதவியால் இந்தத் தகவல் வெளிவந்துள்ளது.

எனவே இச்சம்பவம் தொடர்பாக மாவட்ட சிறுவர் நன்னடத்தை உரிய அதிகாரிகள் விசாரணையை தொடங்க வேண்டும் என குறித்த ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஐயாத்துரை நடேசனின் 10ம் ஆண்டு நினைவு நாள் நேற்று

2004ம் ஆண்டு மே மாதம் 31ம் நாள் மட்டக்களப்பில் தனது வீட்டில் இருந்து காலை பணிக்குச் சென்று கொண்டிருந்தபோது இவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் படுகொலை செய்யப்பட்டபோது அகவை 50 ஆகம். யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து வளர்ந்த ஜி.நடேசன் மட்டக்களப்பில் பல ஆண்டுகள் வாழ்ந்ததுடன், கிழக்கு மக்கள் மீதும், அந்த மண் மீதும் அளப்பரிய பற்றுக் கொண்டிருந்தார்.

நீண்ட காலம் ஊடகப் பணி செய்து அனுபவம் பெற்றிருந்த இவர், ஊடகத்துறையில் முழு நேரமாகப் பணியாற்றாது விட்டாலும், ஒரு முழுநேர ஊடக வியலாளன் ஆற்றும் பணிக்கு ஈடாக, அல்லது அதற் கு மேலாகவும் தனது ஊடப்பணியை செவ்வனே ஆற்றி வந்தவர். இவரது பணிக்கு சாகித்திய விருது, சிறந்த ஊடக வியலாளர் விருது (2000), ஆளுநர் விருது போன்ற பல்வேறு விருதுகள் வழங்கப் பட்டமை, அவரது ஊடகப் பணிக்கு கிடைத்த சான்றுகளாகும். இவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் கூட தனது தலைசிறந்த ஊடகப் பணிக்காக மதிப்பளிக்கப பட்டவர்.

20 வருடங்களுக்கு மேலாக கொழும்பு வீரகேசரி பத்திரிகையின் செய்தியாளராகவும், "நெல்லை நடேசன்" என்ற பெயரில் பத்தி எழுத்தாளராகவும் இருந்த இவர், 1997ஆம் ஆண்டு முதல் லண்டனை தளமாகக் கொண்டு இயங்கிவரும் ஐ.பி.சி வானொலி, கொழும்பு சக்தி தொலைக்காட்சி உட்பட ஏனைய பல ஊடகங்களுக்கு தனது இறுதி மூச்சுவரை பணியாற்றியவர்.

மட்டக்களப்பு மக்கள் மட்டுமன்றி, இன அழிப்பை அதிகம் எதிர்கொண்ட கிழக்கு மக்கள் மீதான இனப் படுகொலைகள் பற்றிய விபரங்களை விரல் நுனியில் வைத்திருந்த இவர், அந்த மக்கள் நினைவுகூரப்பட வேண்டும் என்பதிலும், அந்தப் படுகொலை பற்றிய விபரங்களை ஏனையவர்கள், குறிப்பாக இளையோர் அறிந்திருக்க வேண்டும் என்பதிலும் கரிசனை கொண்டிருந்தவர்.

இனப் படுகொலைகள் மட்டுமன்றி மட்டக்களப்பு பற்றியும், கிழக்கு பற்றியும் எப்பொழுது எந்தத் தக வல் கேட்டாலும் உடனே சொல்லும் ஆற்றல் கொண்டிருந்த இவர், சொல்வதுடன் நிறுத்தி விடாது அவற்றை எழுதி தொலைநகலில் அனுப்பியும் வைப்பார். ஏதாவது ஒரு படுகொலை அல்லது முக்கிய விடயங்கள் பற்றி ஊடகங்கள் கேட்க மறந்து விட்டால் கூட அதனை ஞாபகம் ஊட்டி உடனே அனுப்பி வைப்பார். எதனையும் நேருக்கு நேர் பேசும் இவரது நடைமுறை காரணமாக, உண்மையை அல்லது மக்களிற்கு பாதகமான விடயங்களைக் கடியும் இவரது குணாம்சம் காரணமாக, பல தடவைகள் பல்வேறு எதிர்புகளையும், இன்னல்களையும் எதிர்கொண்டவர். பல தடவைகள் நேரடியாகவும், தொலைபேசி ஊடகவும் கொலை மிரட்டல், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த போதிலும், ஏன் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் (2000ம் ஆண்டு) இடம்பெற்ற போதிலும் கூட, அஞ்சாது தனது குடம்பத்துடன் இறுதிவரை மட்டு மண்ணில் இருந்து மக்களிற்காகக் குரல் கொடுத்த ஒரு சிறந்த ஊடகன்.

ஊடகவியலாளர் ஜி.நடேசன், மாமனிதர் சிவராம், மயில்வாகன் நிமலராஜன், லசந்த விக் கிரமதுங்க என டிச்சர்ட் டி சொய்சா முதல் இன்றுவரை முப்பதிற்கும் மேற் பட்ட ஊடகவியலாளர்கள் படு கொலை செயப்பட்டுள்ளனர். இவீர் களைப் படுகொலை செய்தவர்கள் யார் என்று தெரிந்திருந்தும், அவர்கள் தண்டிக்கப்படவும் இல்லை. இழக்கப்பட்ட உயிர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவும் இல்லை.

# அழகான கிளிநொச்சியில் வடுவாக இருக்கும் அந்த நீர்த்தாங்கியை அகற்றுங்கள்

குண்டுவவைத்து வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கியில் பிரபாகரன் இருந்தாராம் என கதைவிடுகிறார்கள் .. கிளிநொச்சியில் காக்கா கடைச் சந்திக்கு அண்மையாக ஏ-9 வீதியோரம் இருந்த பெரிய நீர்தாங்கி போர்காலத்தில் பெரிதும் நீர்விநியோகத்திற்கு பயன் பட்டுவந்தது.

2009 போரின் போது குண்டுவவைத்து தகர்க்கப்பட்டு வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கியை சுற்றி மதில் கட்டிய இலங்கை இராணுவம் அந்த நீர்தாங்கியை தென்னிலங்கையில் இருந்துவரும் மக்களை ஏமாற்றுவதற்கும் தமது வீரப்பிரதாபங்களை சொல்லவும் இந்த உடைந்து வீழ்ந்த நீர்த்தாங்கியை காட்சிப் பொருளாக்கியுள்ளனர்.

இந்த நீர்தாங்கிக்குள்தான் பிரபாகரன் இருந்ததாக சிங்கள மக்களுக்கு சிப்பாய்கள் சொல்ல அதை வேதமென நம்பி அவர்களும் பூரித்துப்போயினர்.

அழகான கிளிநொச்சியில் வடுவாக இருக்கும் அந்த நீர்த்தாங்கியை அகற்றுமாறு வடமாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கோரியுள்ளார்.

கிளிநொச்சிமாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த நீர்த்தாங்கிக்காணி நீர்ப்பாசன திணைக்களத்துக்கு சொந்தமானது. இந்தக் காணியை இராணுவம் கைப்பற்றி வைத்திருக்கின்றது. இதன் காரணமாக அங்கு அமைக்கப்படவேண்டிய புதிய கிளிநொச்சிக்கான புதிய நீர்தாங்கியை இரத்தினபுரம் வீதியில் ஒரு பள்ளக்காணியில் பாடசாலைக்கு சொந்தான நிலத்தில் அமைக்கப்படுகின்றது.

அக்காணியில் ஒரு மாவட்ட நூலகம் அமைப்பதற்கான ஆலோசனை முதலில் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்படியான கூட்டங்களில் எடுப்பட்ட முடிவுகள் பல நிறைவேற்றப்படவில்லை.

குறிப்பாக இராணுவத்தோடு சம்மந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுவிதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


இன்றைய கூட்டத்தில் கிளிநொச்சி நகரின் மத்தியில் உடைந்து கிடக்கும் நீர்த்தாங்கியை போர்ச்சின்னமாக காட்சிப்பொருளாக மாற்றி இருக்கும் நிலையை தவிர்த்து அதை வேற அபிவிருத்தி தேவைகளுக்கு பயன் படுத்த வேண்டுமென ஈ.பி.டி.பி பா.உறுப்பினர் சந்திரகுமார் மற்றும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஆகியோரும் வலியுறுத்தியதையும் அவரும் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டபூர்வமற்ற முறையில் கண்டல் மரக்குற்றிகளைக் கொண்டு மன்னார் கடற்பரப்பில் செயற்கை மீன்பிடித்தளங்கள்

**பேராசிரியர். சூசைஆனந்தன்**

18.05.2014ல் நாரா(NARA) என்ற நிறுவனம் வங்காலை மீன்பிடிக் கிராமத்தில் கடற் சூழலியல் பாதுகாப்பும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும் என்ற தொனிப்பொருளில்- முக்கியமாக கண்டற் காடுகள் மற்றும் முருகைக்கற்பார்கள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடாத்திக் கொண்டிருந்தனர். அதேவேளை குறித்த இடத்தில் அதன் அயற்கிராம மீனவர்களால் கண்டற்காடுகள் சட்டபூர்வமற்ற முறையில் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. குறித்த விழிப் புணர்வுக் கருத்தரங்கை நடாத்திக் கொண்டிருந்த நாரா நிறுவனத்தினர் நேரடியாகவே சென்று அழிவுற்ற காடுகளை அவதானித்தமை குறிப் பிடத்தக்கது.



The above photograps taken on 14.05.2014



இதுவரையிலும் மன்னார் கடற்பரப்பில் இயற் கையாகவே பரம்பியுள்ள முருகைப்பார் மற்றும் மீன்பிடித்தளங்களில் சட்டபூர்வமற்ற நாசகார மீன்பிடி முறையான டைனமெட் வெடிகளை வீசி அரிய மீன்வளங்களையும் முருகைத்தளங்களை யும் அழித்தொழித்த மீனவர்கள் இன்று கடலில் கரையோர கண்டற்காடுகளை அழித்து அதன் மரக்குற்றிகள் பலவற்றை இணைத்து மன்னார் கடற்பகுதி முழுவதிலும் செயற்கையான மீன்பிடித் தளங்களை உருவாக்கத் தலைப்பட்டுள்ளனர். கண்டல் மரக்குற்றிகளோடு கொங்கிறிற் தூண் கள் கார்ச்சட்டங்கள், இரும்புச்சட்டங்கள் ஆகிய வற்றையும் இணைத்து கடற்படுக்கைகளில் அமிழ்த்தி, இவைகளை GPSன் உதவியுடன் அடையாளம் கண்டு மீன்கள் அதில் ஒருங்கு சேரும்போது டைனமெட் வெடிகளை வீசி மீன்களை அழித்தொழிக்கும் செயற்பாட்டில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளமை அவதானிக்கப்பட் டுள்ளது. செயற்கைத்தளங்களுக்குத் தேவை யான கண்டற்காடுகள் வங்காலை பறவைகள் சரணாலயப்பகுதியினுள் அடங்குகின்ற வங் காலை மற்றும் தள்ளாடி சதுப்புக்கரையோரங் களில் செழித்து வளர்ந்துள்ள காடுகளில் இருந்து வகை தொகையின்றி வெட்டி எடுக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இக்காடுகள் அழிப்புத் தொடர்பாக ஏற்கனவே பல முறைப்பாடுகள் உரியவர்களுக்கு தெரிவிக்கப் பட்டிருந்தும் உரிய நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆரசாங்க அதிபர், மற்றும் பிரதேச செயலாளர்கள் மற்றும் இத்துறை யுடன் தொடர்புடைய நிறுவனங்கள் அனைத்திற் கும் இவ்விடயம் தொடர்பாக தொடர்ந்தும் முறைப் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆயினும்இதற்கு எதிரான நடவடிக்கைகள் எவையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. கரையோரப் பாது காப்பு திணைக்களம் ஒன்று மன்னாரில் இயங்கு கின்றது. ஆயினும் அதனால் கரையோர மக்க ளுக்கு எதுவித நன்மையும் இதுவரை கிட்டியதாக இல்லை. மேலும் கரையோரங்கள் நெடுகிலும் கடற் படையினரின் முகாம்கள், காவலரண்கள் உள்ளன. மூலை முடுக்கு எங்கிலும் இராணுவ மும் பொலிசும் நிற்கின்றது. ஆயினும் டைனமெட் வெடிபொருட்களும் கண்டல் மரக்குற்றிகளும் கடலுக்குள் கடத்திச் செல்லப்படுவது எவ்வாறு நிகழ்கின்றது என்பது ஆச்சரியமான விடயமல்ல. மேலும் சுதந்திரமாக டைனமெட் வெடி வைத்து மீன்பிடித்து அவை தாராளமாக சந்தைப்படுத்தப் பட்டு வருவதுவும் இப்பிரதேசத்தில் இன்று வழ மையான நிகழ்வுகளாக உள்ளன.

ஏற்கனவே தடை செய்யப்பட்ட ஊறவிளைவிக் கக்கூடிய இரும்புக் கம்பிகளைக் கொண்டு மன் னார்க்குடாக்கடலில் அமைந்திருக்கும் கம்பிப் பொறிவலைகளை முற்றாக அகற்றக் கோரி மன் னார் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவும் மீனவர் களால் உதாசீனப்படுத்தப்பட்டு தடை செய்யப் பட்ட மீன்பிடிப் பொறிகள் தொடர்ந்தும் பயன்படுத் தப்பட்டு வருவதுவும் குறிப்பிடத்தக்கது. இவ்வா றான ஒரு சூழலிலேயே பறவைகள் சரணாலயப் பகுதியினுள் அடங்குகின்ற கண்டற்காடுகளின் அழிவும் இடம் பெற்றிருக்கின்றது.

**கண்டற்காடுகளின் முக்கியத்துவம்** கண்டற்காடு களின் முக்கியத்துவம் மிகப் பெரியது. கரையோர கடல் வளங்களின் வாழிடமாகவும், கடற் பறவைக ளின் சரணாலயமாகவும் கண்டற்காடுகள் விளங் குகின்றன. கடலரிப்பிலிருந்து கரையோரத்தைப் பாதுகாக்கும் காவலரண்களாகவும் அவை தொழிற்படுவதுடன் சுற்றுலாத்துறையின் வளர்ச் சிக்கும் இவை துணையாகின்றன. ஒருவகையில் விறகுத் தேவையின் ஒரு பகுதியாகவும் இது நிறைவு செய்கின்றது. இத்தகைய பல்பயனைக் கொண்ட கண்டற்காடுகள் அழிக்கப்படுவது சட்டபூர்வமாக தடைசெய்யப்பட்டிருக்கின்றது. ஏற் கனவே அழிவடைந்த காடுகளைப் புதுப்பித்து மீளவனமாக்கும் செயற்பாடுகளும் அதனைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு களும் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க இன்னொரு பகுதியில் அவை [illegible] அழிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நாசகார செயற்பாடுகளினால் மன்னார்க்குடாக்கடல் வளங் கள் பெரும் அழிவுக்குள்ளாவதுடன் இப்பகுதி மீனவர்களும் பெரும் பாதிப்புக்களை சந்தித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீன்பிடி உடைமைகள் அழிவு**

குறித்த மக்கள் கரையோரப்பிரதேசத்தில் கண்டற் காடுகள் அழிக்கப்பட்டு அவை டைனமெட் வெடி வைத்து மீன்பிடித்தலுக்கான செயற்கைத்தளங் களாக பயன்படுத்துவதினால் படுப்பு வலை மற்றும் கரைவலை மீன்பிடியில் ஈடுபடுகின்ற சிற்றளவு மீன்பிடியா ளர்கள் பெரிதும் பாதிப்புக்குள் ளாகி வருகின்றனர். கடலில் வலைகளை விடுக் கின்ற போது அவை வழிந்து செல்லமுடியாத வாறு கட்டைகளிலும் மரக்குற்றிகளிலும் சிக்கி கடும் சேதத் தையும் அழிவையும் ஏற்படுத்தி விடு கின்றன. இதனால் பல ஆயிரம் ரூபா பெறு மதியான வலைகள் அழிந்து நாசமடைவதுடன் மீன்உற்பத்தியிலும் கடும்தாக்கத்தை ஏற்படுத்தி மீனவர்கள் பெரும்பாதிப்பை சந்தித்து வருகின் றனர். முள்ளிக்குளம், அரிப்பு, நறுவிலிக் குளம் அச்சங்குளம், வங்காலை, சவுத் பார், தாழ்வுபாடு, ஆகிய பகுதிகளைச் சேர்ந்த படுப்பு வலைத் தொழிலாளர் களும்கரை வலைத் தொழிலாளர் களும் கடலுக்குச் செல்வதற்கே தயங்குகின்றனர். ஒரு சில கிராமத்தின் (பணங்கட்டுகொட்டு .பள்ளி முனை) சில கொழுத்த முதலாளிகள் அரசியல் வாதிகளின் செல்வாக்குடன் செய்கின்ற இத்த கைய நாசாகார வேலைகளின் காரணமாக சாதாரண மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப் படைந்துள்ளது. கடற்றொழில் திணைக்களமோ அல்லது கரையோர பாதுகாப்புத் திணைக்களமோ இன்று இதனைத் தடுக்க ஆக்கபூர்வமான நட வடிக்கை எடுக்காது இருப்பது ஏற்றதல்ல.

**கடல்வள அழிவு**

கண்டற்தாவர அழிவுகள் பாரதூரமான விளைவு களை கரையோர உயிர்ச்சூழலியலில் ஏற்படுத் துவதுடன் கடற் பறவைகளின் வாழ்விடங்க ளையும் தகர்த்து விடுகின்றது. இது மறைமுக சுற்றுலாத்துறையையும் பாதிக்கும். மேலும் கரை யோர தாவர அழிவு கடலரிப்பைத் தூண்டி குடி யிருப்புக்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்படும் நன்மை கள் பாதிப்படைவதை- அழிவினை மேற்கொள் வோர் அறிந்திராதது துரதிஸ்ரமானதே.

மேலும் டைனமெட் வெடி வைப்பதன் மூலம் பெருந்தொகையான மீன்வளங்கள் அழிவுக்குள் ளாகின்றன. அத்துடன் முருகைப்பார்கள் அழிந்து நாசமடைவதால் அதனைச் சார்ந்துள்ள உயிரினச் சூழலும் தாக்கமுறுகின்றன. வெடிவைப்பதன் மூலம் சேகரிக்கப்படும் மீனளவைக் காட்டிலும் கைவிட்டுச் செல்கின்ற மீன்களினளவு மிகப் பெரிது. அவை வீணாகவே அழிந்து போவது வேதனைக்குரியது. உடலுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதாகவும் இதன் மூலம் பெறப்படும் மீன்கள் விளங்குகின்றன. மேலும் எதிர்பாராத விதமாக ஏற்படும் வெடிவிபத்துக்களால் பலர் அங்க வீனமான சம்பவங்கள் மன்னார் பிரதேசத்தில் நிறைய உண்டு. கண்கள் மற்றும் இருகைகளை இழந்து தமது வாழ்வை இழந்து தவிப்பவர்களும் இப்பகுதியில் உள்ளனர்.

ஆகவே குறித்த கடற்சூழலையும், கரையோர சூழலையும் பாதுகாப்பதோடு மீனவக்குடும்பங் களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க சம்பந்தப் பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# கட்டணம் செலுத்தாமையால் மாணவர்களை தாக்கிய அதிபர

(கண்டி)
கண்டி பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் மாணவர்கள் மூவரை தாக்கினார் என்று குற்றச்சாட்டு தொடர்பில், நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக வகுப்புகளுக்கு கட்டணம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கட்டணம் செலுத்தாமை காரணமாக தமது பிள்ளைகளை பாடசாலை வளாகத்துக்குள் அதிபர் அனுமதிக்கவில்லை என்று குறித்த பெற்றோர் மத்திய மாகாண கல்வி திணைக்களத்திலும் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை ஹோமாகம பகுதியில் மூன்று மாணவர்கள், உள்ளூர் வாசி ஒருவரால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். இந்த தாக்குதலை மேற்கொண்டவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கஞ்சா இந்தியாவில் மீட்பு

(கொழும்பு)
இலங்கைக்கு கடத்திச் வரப்படவிருந்த பெருந்தொகை கஞ்சா போதைப் பொருள் இந்தியாவில் கைப்பற்றப்பட்டுள்ளது. தமிழகத்தின் இராமேஸ்வரம் கடற்கரைக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தற்காலிக குடில் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தாம் நேற்று இந்த கஞ்சா தொகையை கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 100 கிலோம் கிராம் கஞ்சா இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது. அதேவேளை கொழும்பு வெலிக்கடை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கடை பண்டாரநாயக்கபுர பகுதியில் கைது செய்யப் பட்ட இந்த பெண்ணிடம் இருந்து 2.100 கிராம் ஹெரோ யின் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட பெண் இன்று நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளார்.

# தமிழ் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் பேச்சு வெற்றிகரமாக இடம்பெற்றது - ஹக்கீம்



(கொழும்பு)
பரந்தளவில் முஸ்லிம் காங்கிரஸுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் கொள்கை அடிப்படையில் உடன்பாடுள்ளது. அரசியல் ரீதியான கூட்டான செயற்பாடுகள் குறித்து நாம் தொடர்ந்து பேசுவோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவுக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை கல்முனையில் நடைபெற்ற சந்திப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை மாநகர மேயர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்புடனான பேச்சில், தமிழ், முஸ்லிம்கள் தொடர்பான தேசிய பிரச்சினைகள் உட்பட கல்முனை வடக்கு பிரதேச செயலகத் தரமுயர்த்தல் மற்றும், கல்முனை மாநகர சபையின் தமிழர் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பிலும் இந்த உயர் மட்டக் கூட்டத்தில் ஆராயப்பட்டு இணக்கப்பாடுகள் காணப்பட்டன.

இது பற்றி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:- கல்முனை மாநகர சபைச் செயற்பாடுகள் தொடர்பில் தமிழ் மக்களிடையே நிலவும் முரண்பாடுகள், சந்தேகங்கள் தொடர்பில் பல விடயங்களைப் பரஸ்பர விட்டுக் கொடுப்போடு பரிமாறிக் கொண்டோம்.

இரு சமூகங்களுக்கும் நிம்மதி தரும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க இணக்கம் கண்டுள்ளோம். இதுவரை உடன்பாடுகளுக்கு வராது விட்டாலும், கொள்கையளவில் எமக்குள் எந்த முரண்பாடுகளுமில்லை என்றார். கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா இச்சந்திப்பு குறித்து தெரிவிக்கையில், அன்றாடமுள்ள தமிழ், முஸ்லிம் மக்களிடை யேயான பிரச்சினைகள், மாநகரசபை (கல்முனை) மற்றும் வெளிப்பிரச்சினைகள் பற்றி இரு தரப்பினரும் பேசினோம்.

எதிர்காலத்தில் பிரச்சினையில்லாத அணுகுமுறை பற்றித் தீர்மானித்தோம். தேசிய ரீதியான இணக்கப்பாடு தொடர்பில் தொடர்ந்தும் பேசுவோம். அனைத்து விடயங்களிலும் தேசிய மட்டத்தில் இணக்கமாக வேலை செய்ய உடன்பாடுகள் காண்போம் என்றார். இருதரப்புக்கிடையிலான இன்றைய பேச்சு வெற்றிகரமாக இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகம் எம்.ரி. ஹஸன் அலி, கல்முனை மேயர் நிஸாம் காரியப்பர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் ஹென்ரி மகேந்திரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.இராஜேஸ்வரன், ரீ.கலையரசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மலேசியாவில் மரணமானவர் கொலை செய்யப்பட்டாரா?



(மலேசியா)
மலேசியாவில் மரணமான இலங்கையர் அவுஸ்திரேலியா அனுப்புவதாக ஏமாற்றியே கொலை செய்யப்பட்டுள்ளார். மலேசியாவில் மட்டக்களப்பைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் வாகன விபத்தில் மரணித்தமை தொடர்பாக புதிய சர்ச்சை கிளம்பியுள்ளது.

கடந்த 24ம் திகதி மலேசியாவில் விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் விபத்துக்குள்ளாகியதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு களுதாவளையை பிறப்பிடமாக கொண்ட அருந்தவச்செல்வன் சச்சுதன் என்பவரே வாகன விபத்தில் உயிர் இழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர் சுமார் 4 வருட காலமாக மலேசியாவில் தொழில் புரிந்துள்ளார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. நேற்று அவருடைய உடலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது இதன் போது அவருடைய மனைவி கருத்து தெரிவிக்கையில்,

தனது கணவன் கடந்த ஒரு வருடத்துக்கு முதல் தான் அவுஸ்திரேலிய செல்வதற்காக ஒரு தரகரிடம் இலங்கை பணம் 8 லட்சம் ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது. அதற்க்கு பணம் தேவை, பணத்தை தனது கணக்குக்கு போடும்படி மனைவியிடம் கூறியுள்ளார்.

அதன் படி மனைவியும் பணத்தை அனுப்பி வைத்துள்ளார். தரகர்கள் அவுஸ்திரேலியா அனுப்புவதாக கூறி இவரை ஏமாற்றி உள்ளனர். இதன் காரணமாக இறந்தவருக்கும் தரகருக்கும் இடையில் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் தனக்கு கணவன் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார் என தெரிவித்தார். இவருடைய மரணம் திட்டமிட்டு செய்யப்படுள்ளது என தெரிவித்தார்.

# இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜித் டொவால்

(இந்தியா)
இந்தியாவின் முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி அஜித் டொவால், புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பு நேற்று வெளியாகியுள்ளது. டொவால், இந்தியாவின் பாதுகாப்பு நிபுணராக கருதப்படுகிறார்.

டொவலை பொறுத்தவரை அவர் உள்ளக பாதுகாப்பு விடயங்கள் மாத்திரமின்றி வெளிநாட்டு பாதுகாப்பு விடயங்களிலும் பரீட்சமானவர். பயங்கர வாத தடுப்பு விடயங்களிலும் எல்லைப் பாதுகாப்பு விடயங்களிலும் அவர் முக்கியமானவராக உள்ளார். எனவே அவரின் நியமனம் முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவியை பொறுத்தவரையில் இலங்கைப் பிரச்சினையில் அது முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. காங்கிரஸின் ஆட்சியில் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த சிவ்சங்கர் மேனன், இலங்கையின் இனப்பிரச்சினை மற்றும் பாதுகாப்பு பிரச்சினை என்பவற்றில் முக்கிய பங்கை ஆற்றினார்.

# ஜனாதிபதி அழைத்தால் அரசியலுக்கு வருவேன் என்கிறார் கோத்தபாய!

(கொழும்பு)
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அழைத்தால் அரசிய லுக்கு வருவராம் அவரது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்த பாய ராஜபக்ச. அப்படி வந்தால் கொழும்பில்தான் தேர்தலில் குதிப்பாராம்! - இதனை அவரே தெளிவாகக் கூறியிருக் கின்றார்.

விஜய பத்திரிகை நிறுவனம் "தேசய" (தேசம்) என்றொரு சிங்கள வார இதழை இவ்வாரம் முதல் வெளியிடுகின்றது. அதன் முதலாவது இதழுக்கு வழங்கிய விசேட செவ்விலேயே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச இத்தகவலைத் தெரிவித்திருக் கின்றார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரி வித்த தகவல்களின் சாராம்சம் வருமாறு:- ஜனாதிபதி என்னிடம் ஒப் படைத்த பணிகளை நான் செவ்வனே நிறைவேற்றியிருக்கிறேன். அரசியலுக்கு வரும் எண்ணம் எனக்கு இல்லை. ஆனால் அரசியலுக்கு வருமாறு ஜனாதிபதி என்னைப் பணித்தாரானால் நான் அரசியலுக்கு வருவேன்.

நான் நாட்டுக்கு என்ன செய்துள்ளேன் என்பது மக்களுக்கு நன்கு தெரியும். எனக்கு மக்கள் அங் கீகாரமளிப்பார்கள். நான் அரசியலுக்கு வருவது நாட் டுக்குத் தேவை எனக் கருதி ஜனாதிபதி என்னை அழைப்பாராயின் அதற்குப்பின் நிற்கமாட்டேன்.

நாட்டுக்கு எந்த வகையில் நான் பணியாற்றுவது பொருத்தமானது என ஜனாதிபதி விரும்புகின்றாரோ அந்த வகையில் நான் பணியாற்றுவேன். என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நான் செவ்வனே நிறைவேற்றியமை போல எதிர்காலத்திலும் எனக்கு வழங்கப்படும் பொறுப்புகளை நான் தொடர்ந்து நிறைவேற்றுவேன்.

அரசியலுக்கு வருவதானால் நான் அம்பாந்தோட்டையில் குதிக்கமாட்டேன். கொழும்பில் தான் நான் இப்போது வசிக்கிறேன். இங்கிருந்து தான் அரசியலுக்குள் நுழைவேன். எனது குடும்பம் அரசியலில் இருபத்தியைந்து வருடங்களுக்கு மேல் பொறுப்பான பணிகளை ஆற்றியிருக்கின்றது.

நான் அரசியலுக்கு வருவதால் ராஜபக்சக்களின் ஆதிக்கம் அதிகரித்து விடும் என்றோ, அது தவறு என்றோ கூற மாட்டேன். அமெரிக்காவில் கென்னடி பரம்பரை, இந்தியாவில் நேரு தலைமுறை என்றெல்லாம் அரசியலில் இல்லையா? அது போன்றது தான் இதுவும். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நீதியரசர்தான், கல்வி கற்றவர் தான். ஆனால் இப்போது அவர் திறமையானவராகச் செயற்படவில்லை. சிறந்த நிர்வாகியாகச் செயற்படவில்லை.

அவர், அதிக அழுத்ததுக்குள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடிப்படை வாதத்துக்குள் அழுந்திப் போயிருக்கின்றார். மக்களுக்கு சேவை செய்வதற்கான அதிகாரங்கள் அவருக்கு இருக்கின்றன.

ஆனால் அவற்றைப் பிரயோ கித்து நிறைவேற்றும் திறமையற்ற வராகவே அவர் உள்ளார். இத்தகைய சாரப்பட அந்தப் பேட்டியில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் கோத்தபாய ராஜபக்ச.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளையாட்டில் பறிபோன வாழ்க்கையை மீட்ட நடிகை

(சிட்னி)
அவுஸ்திரேலியா நாட்டில் நடந்த அல்ட்ரா மராத்தான் போட்டியின் போது தீ காயம் அடைந்த நடிகை துரியா பிட்டுக்கு 10 மில்லியன் டொலர் நட்டஈடு கிடைத்துள்ளது. அவுஸ்திரேலியாவின் ஓட்ட பந்தைய வீரர் மற்றும் நடிகையான துரியா பிட் (26), கடந்த செப்டம்பர் 2011ம் ஆண்டு ரேசிங் தீ பிளாணட் நடத்திய அல்ட்ரா மராத்தான் போட்டியில் கலந்து கொண்டார்.

அப்போது கிம்பெர்லி பகுதியில் ஓடிக் கொண்டிருந்த போது திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது. இதனால் துரியா பிட் மற்றும் அவருடன் பங்கேற்ற சாண்டேர்சன் இருவருக்கும் 60 சதவிகித தீ காயங்கள் ஏற்பட்டது. மேலும் துரியாவிற்கு இடது கையில் 4 விரல்களும். வலது கை கட்ட விரல்களும் நீக்கப்பட்டது, சாண்டேர்சன் தனது இடது காலை இழந்தார்.

தற்போது இவர்களுக்கு போட்டி தொகுப்பாளர் ரேசிங் தீ பிளாணட் இடமிருந்து 10 மில்லியன் டொலர்கள் நட்ட ஈடு கிடைத்துள்ளது. உச்ச நீதிமன்றத்தில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

இது குறித்து துரியாவின் காதலன் மைக்கில் ஆஸ்கின் கூறுகையில், இந்த வழக்கு சாதகமாக முடிந்ததால் சந்தோஷம் கொள்வதாகவும், தற்போது தாங்கள் வாழ்க்கையை தொடரப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கு உக்ரைனில் ராணுவ நடவடிக்கை தொடரும் உக்ரைன் திட்டவட்டமாக தெரிவிப்பு

(கீவ்)
கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கத்தில் உள்ள கிழக்கு உக்ரைனில் அமைதி ஏற்படுத்தும் வரையில் ராணுவ நடவடிக்கை தொடரும் என்று உக்ரைன் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கிழக்கு உக்ரைனில் டன்ஸ்க், லுஹான்ஸ்க் மாகாணங்களில் முக்கிய அரசு கட்டிடங்களை ரஷிய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் ஆக்கிரமித்துள்ளனர். இவற்றை மீட்டெடுப்பதற்காக உக்ரைன் படையினர் அங்கு தாக்குதல் தொடுத்து வருகின்றனர்.

ஆனால் அந்த இரு மாகாணங்களிலும் கடந்த 11-ந்தேதி கிளர்ச்சியாளர்கள் பொது வாக்கெடுப்பு நடத்தினர். அந்த வாக்கெடுப்பில் கிளர்ச்சியாளர்கள் தரப்புக்கு அமோக வெற்றி கிடைத்தது. இதையடுத்து அவ்விரு மாகாணங்களும் சுதந்திர பிரகடனம் வெளியிட்டன. ஆனால் அதை உக்ரைனும், அதன் மேற்கத்திய கூட்டாளி நாடுகளும் ஏற்கவில்லை.

இந்த நிலையில் சமீப காலமாக ரஷிய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும், உக்ரைன் படையினருக்கும் இடையே பலத்த சண்டை நடந்து வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன் டன்ஸ்க் நகர் விமான நிலையத்தைக் கைப்பற்ற முயன்ற ரஷிய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் மீது உக்ரைன் படையினர் கடும் தாக்குதல் நடத்தினர். இதில் கிளர்ச்சியாளர்கள் 40பேர் பலியாகினர்.

இந்த நிலையில், ரஷிய எல்லையில் அமைந்துள்ள ஸ்லாவ்யான்ஸ்க் நகரில் ராணுவ ஹெலிகாப்டர் ஒன்றை கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தினர். இதில் ஒரு ராணுவ ஜெனரல் உள்பட 14 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், உக்ரைன் ராணுவ மந்திரி மைக்காய்லோ கோவால், கீவ் நகரில் நேற்று நிருபர்களிடம் கூறினார். அப்போது அவர், கிழக்கு உக்ரைனில் அமைதியையும், ஒழுங்கையும் ஏற்படுத்துவதுதான் எங்கள் நோக்கம். கிழக்கு உக்ரைனில் அமைதியை ஏற்படுத்தும் வரையில் கிளர்ச்சியாளர்கள் மீது ராணுவம் நடத்தும் தாக்குதல் தொடரும் என அறிவித்தார். கிழக்கு உக்ரைனின் அமைதியற்ற நிலையின் பின்னணியில் ரஷியா உள்ளது என்று அவர் குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே கிழக்கு உக்ரைனில் உக்ரைன் படையினர் தங்கள் தாக்குதலை நிறுத்த வேண்டும் என ரஷியா வலியுறுத்தி உள்ளது. டன்ஸ்க் மக்கள் ஜனநாயகக் குடியரசின் தலைவர் என்று தன்னை அறிவித்துக்கொண்ட கிளர்ச்சியாளர்களின் தலைவர் அலெக்சாண்டர் போரோடய், உக்ரைனுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்றால், முதலில் டன்ஸ்க், லுஹான்ஸ்க் மாகாணங்களில் துருப்புக்களை உக்ரைன் விலக்கிக்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளார்.

## மலேசியாவில் கடத்தப்பட்ட இளம்பெண் 38 பேரால் கற்பழிப்பு

(கோலாலம்பூர்)
மலேசியாவில் கடத்தப்பட்ட இளம்பெண் 38 பேரால் கற்பழிக்கப்பட்டார். மலேசியில் கெலான்டன் பகுதியைச் சேர்ந்த 15 வயது இளம்பெண் தனது தோழியை பார்க்க சென்றாள். பின்னர் அவர்கள் இருவரும் தனிமையில் சந்தித்து பேசி கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த ஒரு கும்பல் 15 வயது இளம் பெண்ணை கடத்தி சென்றது. பின்னர் அங்கு கேட்பாரற்று கிடந்த குடிசைக்குள் அவளை கற்பழித்தது. இது குறித்து போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். அதில் அந்த பெண்ணை 38 பேர் கற்பழித்தது தெரிய வந்தது.

அதை தொடர்ந்த 12 பேரை போலீசார் கைது செய்தனர். மற்றவர்களை தேடி வருகின்றனர். மேலும் அந்த பெண்ணின் தோழியும் கற்பழிக்கப்பட்டிருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர். எனவே அவளிடமும் விசாரணை நடக்கிறது.

இதற்கிடையே கற்பழிப்பில் ஈடுபட்டவர்களுக்கு இஸ்லாமிய சட்டப்படி கடும் தண்டனையும், கடுமையான அபராதமும் விதிக்க வேண்டும் என முஸ்லிம் கட்சி வலியுறுத்தியுள்ளது.

## திருப்பதியில் தலைமுடி ஏலத்தில் 239 கோடி ரூபாய் வருமானம்



(இந்தியா)
திருப்பதி கோவிலில் தலைமுடி ஏலம் மூலம் 239 கோடி ரூபாய் வருமானம் வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

திருப்பதிக்கு வரும் பக்தர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் தலைமுடியை காணிக்கையாக கொடுப்பதை வழக்கத்தில் வைத்துள்ளனர்.
இந்நிலையில், பக்தர்களின் தலைமுடி காணிக்கை மூலம் தினமும் பல டன் முடி சேர்கிறது. அந்த முடிகளை சேகரிக்க பல இடங்களில் மையங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், அங்கு சேரும் முடிகள் திருமலை, திருப்பதி தேவஸ்தானம் மூலம் ஏலம் விடப்படும். கடந்த ஆண்டு தலை முடி விற்பனை மூலம் ரூ.205 கோடி கிடைத்தது.

இந்நிலையில், இந்த ஆண்டு தலைமுடி விற்பனை மூலம் ரூ.239.68 கோடி திருப்பதி கோவிலுக்கு வருமானமாக கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ.34 கோடி அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மதம் மாறிய திருமணத்துக்காக தூக்கு சிறையில் பிரசவித்த மனைவியை சந்தித்த கணவர்



(கார்டோம்)
ஆப்பிரிக்க நாடான சூடானை சேர்ந்தவர் மெரியம் அட்ராப் அல் ஹாடி முகமது அப்துல்லா. இவரது தாய் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். தந்தை முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர். ஆனால் சிறு வயதில் இருந்தே இவர் தனது தாயின் பாரம்பரிப்பில் வளர்ந்தார். எனவே கிறிஸ்தவராக வளர்ந்த இவர் தனது பெயரை மெரியம் யெய்யா இப்ராகிம் இசாக் என மாற்றிக் கொண்டார்.

இந்த நிலையில் அவர் கிறிஸ்தவர் ஒருவரை திருமணம் செய்து கொண்டார். தற்போது ஒரு குழந்தைக்கு தாயாகி விட்டார். இதற்கிடையே இவர் மதம் மாறி திருமணம் செய்ததாக கூறி அவர் மீது கார்டோம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. ஜோர்டான் ஒரு முஸ்லிம் நாடு. இங்கு முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த ஒரு பெண் வேறு மதத்தினரை திருமணம் செய்ய அனுமதி இல்லை. இந்த வழக்கில் கடந்த 15-ம் தேதி தீர்ப்பு கூறப்பட்டது. அதில், மதம் மாறி திருமணம் செய்த மெரி யத்துக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு சர்வ தேச நாடுகள் 'கடும் கண்டனம்' தெரிவித்துள்ளன.

நிறைமாத கர்ப்பிணியான 27 வயது மெரியம் தனது 20 மாத மகனுடன் கர்டோம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு பிரசவகாலம் நெருங்குவதால் வெளி ஆஸ்பத்திரியில் அனுமதித்து மகப்பேறு பார்க்க வேண்டும் என்று அவரது கணவர் விடுத்த வேண்டுகோளை சிறை அதிகாரிகள் நிராகரித்து விட்டனர்.
இதற்கிடையில், கடந்த செவ்வாய்க் கிழமை, சிறை ஆஸ்பத்திரியில் அவருக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. பிரசவித்த மனைவியையும், பிறந்த குழந்தையும் பார்க்க மனு செய்த கணவர் டானியல் வானி-யின் கோரிக்கையை சிறை அலுவலர்கள் முதலில் மறுத்து விட்டனர்.

பின்னர், உயர் அதிகாரிகளை அணுகிய அவர், இரண்டு நாட்களுக்கு ஒரு முறை சிறைக்கு சென்று மனைவியை பார்த்துப் பேசும் அனுமதியை பெற்றார். அதன் படி, நேற்று சிறைக்கு சென்ற அவர், மனைவியையும் [illegible] புதிதாக பிறந்த [illegible] யோரையும் சந்தித்தார்.

## மர்மமான முறையில் மரணித்த கர்ப்பிணி

(பிரித்தானியா)
பிரித்தானியாவில் குணம் அடைந்து விட்டதாக மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு அனுப்பிய கர்ப்பிணி பெண் பரிதாபமாக உயிரிழந்தார். பிரித்தானியாவின் கெண்ட் நகரை சேர்ந்த ஜெட்க்ளென் (22), என்ற பெண் 8 மாத கர்ப்பமாக இருந்துள்ளார்.

இந்நிலையில் மருத்துவமனைக்கு சிகிச்சை எடுக்க சென்ற இப்பெண்ணை பரிசோதித்த மருத்துவர்கள், தற்போது நலமாக இருப்பதாகவும், குழந்தை பெற்றுக் கொள்வதற்கு மட்டும் வந்தால் போதும் என்று கூறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வீட்டுக்கு வந்த இப்பெண் இரண்டு நாட்களுக்கு பின் மரணமடைந்துள்ளார்.

இவருக்கு ஏற்கனவே 1 வயதில் குழந்தை ஒன்று உள்ளது, இவர் குளியறையில் பல் துலக்கி கொண்டிருக்கும் போது அப்படியே கீழே விழுந்து இறந்துள்ளார்.

இதுகுறித்து இவரது கணவன் மைக்கேல் கூறுகையில், ஜெட் நோயால் பாதிக்கப்பட்டு இருந்ததாகவும், ஆனால் மருத்துவர்கள் பரிசோதித்து வீட்டுக்கு அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜெட் உடன் அவர் வயிற்றில் உள்ள குழந்தையும் இறந்தது, அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## துபாயில் பெண் மானபங்கபடுத்திய வழக்கில் இந்திய பஸ் ஓட்டுநருக்கு சிறை

(துபாய்)
துபாயில் அல் முராக்காபாத் பகுதியில் ஒரு பஸ்சில் இந்தியாவை சேர்ந்த சாரதி ஒருவர் நின்றபடியே பயணம் செய் தார். அவருக்கு முன்னால் எகிப்தை சேர்ந்த 38 வயது ஒரு பெண் ஒருவர் நின்று கொண்டு இருந்தார்.


அருகில் நின்று கொண்டிருக்கும் சாரதி தன் மீது கை வைத்து விட்ட தாக [illegible] பெண் கூச்சலிட்டார். [illegible] பரபரப்பு ஏற்பட்டது. உடனே அங்குவந்த போலீசார் சாரதியை கைது செய்தனர்.

அவர் மீது மானபங்க வழக்கு பதிவு செய்யப்பட்டது. கோர்ட்டில் வழக்கு விசாரணை நடந்தது. அப்போது தான் எந்த குற்றமும் செய்யவில்லை என சாரதி மறுத்தார். தற்செயலாக தான் எனது கை அவர் மீதுபட்டது என கூறினார். ஆனால் அதை ஏற்க மறுத்த கோர்ட்டு அவருக்கு 6 மாதம் ஜெயில் தண்டனை விதித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜெய்யுடன் ஒன்பது நாயகிகளா?



படம் இப்போ வருது, அப்போ வருது என்று நீண்ட இடைவெளிக்கு பிறகு படத்தை வெளியிட முடிவு செய்துள்ளனர் வாலு படத்தின் படக்குழுவினர். இந்த படத்துக்காக சமீபத்தில் கூட ஒரு பாடல் படமாக்கப்பட்டது நமக்கு தெரியும்.

தற்போது இந்தப் படத்தை இயக்கியிருக்கும் விஜயசங்கர், அடுத்து ஒரு வித்தியாசமான படத்தை இயக்க திட்டமிட்டுள்ளார். அந்த புதிய படத்திற்கு கன்னி ராசி என்று பெயர் வைத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படத்தில் கதாநாயகனாக ஜெய் நடிக்க, அவருடன் 9 கதாநாயகிகள் நடிக்கிறார்களாம்.

இந்த கதாநாயகிகளில் ஹன்சிகா மோத்வானி, நயன்தாரா, த்ரிஷா, ஆன்ட்ரியா, லட்சுமிராய், ஸ்ரீதிவ்யா முதலானோர் முக்கிய வேடத்தில் நடிக்கின்றனராம்.


மேலும் இப்படத்தில் சிம்புவும் ஒரு கெஸ்ட் ரோலில் நடிக்க, படப்பிடிப்பு அக்டோபர் மாதம் தொடங்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 1985ல் பாண்டியராஜன் இயக்கத்தில், பிரபு நடிப்பில் கன்னி ராசி என்ற பெயரில் ஒரு படம் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

# உடற் பயிற்சியே அழகு ரகசியம் - தமன்னா

உடற் பயிற்சியே அழகு ரகசியம் என்று தமன்னா கூறினார். தமிழ், தெலுங்கு படங்களில் பிசியாக இருந்த தமன்னா தற்போது இந்தி படத்திலும் நடிக்கிறார். இந்தி பட வாய்ப்பு கிட்டியதற்கு அவரது உடல் வசீகரமே காரணம் என்கின்றனர். முன்பை விட அழகாக இருக்கிறார். முகத்தில் புது பொலிவு தெரிகிறது. உடலையும் ஒல்லியாக வைத்துள்ளார். இதனாலேயே தெலுங்கு சூப்பர் ஸ்டார் மகேஷ் பாபுவுடன் நடிக்க வாய்ப்பு வந்தது. தெலுங்கில் மெகா பட்ஜெட்டில் தயாராகும் பாகுபலி சரித்திர படத்திலும் நடிக்கிறார். இப் படத்துக்காக விசேஷ வாள் சண்டையும் கற்றுள்ளார்.

அழகு ரகசியம் பற்றி தமன்னாவிடம் கேட்ட போது அவர் கூறியதாவது: அழகு ரகசியம் என்று எதுவும் இல்லை. ஒவ்வொருவரும் அவரவர் உடம்பை நேசித்தாலே போதும் அழகு தானாக வந்து விடும். என்னை விரும்புகிறீர்களோ அதை சாப்பிடுங்கள். அதே நேரம் உடற்பயிற்சி செய்து கூடுதல் கலோரிகளை கரைக்கவும் தயாராக இருக்க வேண்டும் நான் இப்படித்தான் இருக்கிறேன். தவறாமல் உடற்பயிற்சி செய்கிறேன் என்றார்.

# மம்மூட்டியுடன் மீண்டும் ஜோடி சேரும் லட்சுமி ராய்



தமிழில் இரும்புக் குதிரை படப்பிடிப்பில் தற்போது மும்முரமாக நடித்து வரும் நடிகை லட்சுமி ராய் அடுத்து மலையாளப் பட உலகின் சூப்பர் ஸ்டாரான மம்மூட்டியுடன் இணைந்து நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இந்தப் படத்தின் தலைப்பு "ராஜாதி ராஜா" என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செய்தியை உறுதி செய் த லட்சுமிராய் மம்மூட்டியுடன் மீண்டும் இணைவது தனக்கு உற்சாகத்தைக் கொடுக்கின்றது என்றார். தாங்கள் இருவரும் ஒரு அதிர்ஷ்ட ஜோடி யாக மலை யாளத்தில் கருதப் படுவதாகவும் லட்சுமி கூறினார். முதலில் காதலியாகவும் பின்னர் மனைவியாகவும் வரும் தன்னுடைய கதாபாத்திரம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் சில இடங்களில் மம்மூட்டியை விடவே தனக்கு ஆதிக்கம் அதிகம் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது நடித்துவரும் "இரும்புக் குதிரை" பற்றி கூறுகையில், இந்தப் படத்தின் பெரும்பகுதி பாண்டிச்சேரி சாலைகளில் எடுக்கப்பட்டது என்றார். கடற்கரை பகுதிகளிலும் படப்பிடிப்பு நடந்ததால் வெயிலின் தாக்கம் தன்னை சுட்டெரித்தது என்றும் லட்சுமி கூறினார். இந்தப் படத்திற்கான விளம்பரப் பாடல் விரைவில் பதிவு செய்யப்பட உள்ளதாகத் திரைத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆனைமலையில் விஷால் - ஸ்ருதி ஹாசன் நடிக்கும் பூஜை படத்துக்கு அபராதம்



ஆனைமலை ஆழியாற்றங்கரையில் நடிகர் விஷால் மற்றும் ஸ்ருதி ஹாசன் நடிக்கும் பூஜை என்ற சினிமாவுக்கு படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது.

இதில் விஷால் காரில் மற்றொரு காரை முந்திச்செல்வது போன்று காட்சி படமாக்கப்பட்டது. இதற்காக ஆனைமலை உடுமலை சாலை முற்றிலும் அடைக்கப்பட்டது. இதனால் ஆம்புலன்ஸ், பஸ் உள்ளிட்ட வாகனங்கள் செல்ல படக்குழுவினர் அனுமதிக்க வில்லை.

இதை அறிந்த அந்த பகுதி கவுன்சிலர் படக்குழுவினரிடம் சென்று உரிய அனுமதி பெற்றுள்ளீர்களா? என்று கேட்டார். கவுன்சிலர் மற்றும் பொதுமக்களை படக்குழுவினர் மிரட்டியதாக தெரிகிறது. இதனால் அதிர்ச்சியடைந்த கவுன்சிலர் பேரூராட்சி செயல் அலுவலரை தொடர்பு கொண்டு இது குறித்து கேட்டார்.

அதற்கு செயல் அலுவலர் படப்பிடிப்புக்கான எந்த அனுமதியும் யாரும் வாங்கவில்லை என்று கூறினார். பின்னர் இது குறித்து ஆனைமலை போலீசில் புகார் செய்யப்பட்டது. விரைந்து வந்த போலீசார் அனுமதியில்லாமல் போக்குவரத்தை நிறுத்தக் கூடாது. கண்டிப்பாக பொது மக்களையும் மிரட்டக் கூடாது என்று எச்சரித்தனர்.

பின்னர் இங்கு படப்பிடிப்பு நடத்த நாளொன்றுக்கு வசூலிக்கப்படும் ரூ.2500 பணத்தையும் அனுமதியில்லாமல் படப்பிடிப்பில் ஈடுபட்டதால் ரூ.2500 அபராதத்தையும் வசூலித்தனர். இதனால் சிறிது நேரம் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது.

# அனிமேஷனில் அலங்கோல உருவம் தீபிகா படுகோனே கோபம்

கோச்சடையான் படத்தில் தனது உருவத்தை அலங்கோலமாக காட்டி விட்டதாக தீபிகா படுகோனே கோபத்தில் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. தீபிகா படுகோனே தமிழில் அறிமுகமான முதல் படம் கோச்சடையான்.

ஏற்கனவே ராணா படத்தில் ரஜினி ஜோடியாக ஒப்பந்தம் செய்யப்பட்டு அது நின்று போனதால் கோச்சடையான் அனிமேஷன் படத்தில் நடிக்க வைக்கப்பட்டார். இந்த படத்தை அதிகம் எதிர்பார்த்தார். இதன் மூலம் தென்னிந்திய மார்க்கெட்டை பிடிக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது. சென்னையில் நடந்த இந்த படத்தின் பாடல், டிரெய்லர் வெளியீட்டு விழாவிலும் பங்கேற்றார். கோச்சடையான் ரிலீசானதும் தனது நடிப்பு பற்றி ரசிகர்கள் என்ன சொல்கிறார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்த்தார். ஆனால் இணைய தளங்களில் ரசிகர்கள் அவரது நடிப்பை விமர்சித்து கருத்துக்களை பதிவு செய்தனர். அனிமேஷனில் தீபிகா படுகோனே அழகை அலங்கோலபடுத்தி விட்டதாகவும் விமர்சனங்கள் வந்தன. படம் வெற்றிகரமாக ஓடினாலும் கூட தீபிகா படுகோனே கேரக்டருக்கு வரவேற்பு இல்லை. இது அவருக்கு வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கிசு - கிசு



பத்து வருடமாக கதாநாயகியாக நடித்து வரும் மூனுசா நாயகியிடம், சுமார் மூஞ்சி குமார் நடிகருடன் ஜோடியாக நடிக்க இயக்குனர் ஒருவர் அணுகினாராம்.

ஆனால் நாயகியோ சுமார் மூஞ்சி குமார் நடிகருடன் ஜோடியாக நடிக்க மாட்டேன் என மறுத்து விட்டாராம். இதனால் இயக்குனர் வேறு நாயகியை தேடி வருகிறாராம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோடி இலங்கை வருகிறார் அதற்கு முன்பாக சுஷ்மா வருவார்



(கொழும்பு)
இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிவகார அமைச்சர் சு்மா சுவராஜ் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்ய தீர்மானித்துள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் முதலில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இலங்கை வரவுள்ளார். இதன் பின்னர் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வார் என பேசப்படுகிறது. பிரதமர் மோடி பயணத்துக்கு முன்பாக இலங்கை செல்கிறார் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ்? பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்வதற்கு முன்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் அந்நாட்டுக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதாக கூறப்படுகிறது.

பிரதமர் நரேந்திர மோடி ஓரிரு மாதங்களில் இலங்கை செல்லக் கூடும் என்று டெல்லி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கு முன்னதாக வெளியுறவுத் துறை அமைச்சர் சுஸ்மா ஸ்வராஜ் அந்நாட்டுக்கு செல்ல இருக்கிறார்.

எதிர்க்கட்சி தலைவராக இருந்த போது சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில் இந்திய நாடாளுமன்ற எம்.பிக்கள் குழு இலங்கை சென்றிருந்தது. அப்போது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட இடங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களையும் அரசியல் தலைவர்களையும் சுஷ்மா தலைமையிலான குழு சந்தித்தது.

இந்நிலையில் பிரதமர் மோடி விரைவில் இலங்கை செல்லக் கூடும் என்று கூறப்படுகிறது. அதற்கு முன்னதாக சுஷ்மா ஸ்வராஜ் அங்கு செல்வார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த தயார் இந்தியாவுக்கு அறிவித்தது இலங்கை

(கொழும்பு)
இலங்கை அரசியல் அமைப்பின் 13 வது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களை அமுல்படுத்த முடியும் என அரசாங்கம், இந்தியாவுக்கு அறிவித்துள்ளது.

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி , அரசியல் அமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையான அமுல்படுத்துமாறு விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் அரசாங்கம் இதனை கூறியுள்ளது.

பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கினால், பொலிஸ் திணைக்களம் முற்றாக வீழ்ச்சியடையும் என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. எவ்வாறாயினும் 13வது திருத்தச் சட்டத்தில் உள்ள ஏனைய அதிகாரங்களை அமுல்படுத்த முடியும் என அரசாங்கம் இந்தியாவிற்கு தெரியப்படுத்தியுள்ளது.

இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள நரேந்திர மோடி, இலங்கை அரசாங்கம் 13வது திருத்தச் சட்டத்திற்கும் அப்பால் சென்ற அதிகாரத்தை மாகாணங்களுக்கு பரவலாக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார். இந்த நிலையில், இலங்கை அரசாங்கம் மேற்படி தனது முடிவை இந்தியாவுக்கு அறிவித்துள்ளது.

# விமல் வீரவன்ஸ சிறந்த நடிகர் முஹிபுர் ரஹ்மான்

(கொழும்பு)
தேசிய முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ ஒரு சிறந்த நடிகர் என ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஹிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக் கையில், இந்தியாவின் பிரதமராக மோடி பதவியேற்கும் முன்னரே அவ ரை இலங்கைக்கு வருகை தருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்தது.

விமல் வீரவன்ஸ இரண்டு, மூன்று கூட்டங்களை நடத்தி அரசாங்கத்தை விமர்சித்ததும், அவரது 12 யோசனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்கினார். வாக்குகள் பிரிந்து விடும் என்று ஜனாதிபதி பயந்தார். விமல் அரசாங்கத்தில் இருந்து வெளியேற மாட்டார். அவர் ஒரு சிறந்த நடிகர்.

அரசாங்கத்திற்கு கெட்ட காலம் தொடங்கி விட்டது என்ற புரிந்து கொண்ட விமல் இந்த நாடகம் நடிக்க ஆரம்பித்து விட்டார். உண்மை எது பொய் எது என்பதை விரைவில் அறிந்து கொள்ள முடியும் என்றும் முஹிபுர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்.

# புலிச் சந்தேகநபரின் கடவுச் சீட்டை புதுபித்த தூதரகம்

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர் என கூறப்படுபவரின் கடவுச் சீட்டை கோலாலம்பூருக்கான இலங்கைத் தூதரக அதிகாரிகள் புதுப்பித்துக் கொடுத்துள்ளனர். காலாவதியான கடவுச் சீட்டை இலங்கைத் தூதரக அதிகாரிகளிடம் வழங்கி புதுப்பித்துக் கொண்டதாக குறித்த புலிச் சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் படைப் பிரிவு இரண்டாம் நிலைத் தலைவராக கருதப்படும் குசாந்தன் எனப்படும் முள்ளிச்செல்வம் என்பவரே இவ்வாறு தெரிவித்துள்ளார். கடவுச் சீட்டை புதுப்பித்துக் கொடுத்த தூதரக அதிகாரிகள் குசாந்தனை அடையாளம் காண வில்லை என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மலேசிய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரே குசாந்தனை கைது செய்துள்ளனர். கடந்த 15ம் திகதி குசாந்தன் உள்ளிட்ட மூன்று பேரை மலேசிய அதிகாரிகள் கைது செய்ததுடன், கடந்த 25ம் திகதி இவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். குறித்த மூன்று பேரிடமும் பயங்கரவாதத் தடைப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொபி அனானுக்கு வீசா வழங்குவதா? இல்லையா? - அரசுக்குள் பிளவு



(கொழும்பு)
ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு இலங்கைக்கு வர வீசா அனுமதி வழங்குவது தொடர்பில் அரசாங்கத்திற்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமிக்க உள்ள விசாரணைக் குழுவின் தலைவராக கொபி அனான் நியமிக்கப்பட உள்ளார். விசாரணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட உள்ள கொபி அனானுக்கு இலங்கைக்குள் வர கட்டாயம் வீசா அனுமதி வழங்கப்பட வேண்டும் என அரசாங்கத்தில் உள்ள ஒரு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கைக்குள் வந்து அவ்வாறான விசாரணைகளை நடத்த எவருக்கும் வீசா அனுமதி வழங்கப்படாது என்ற அரசாங்கத்தின் கொள்கையை கொபி அனானுக்கும் செயற்படுத்த வேண்டும் என மற்றைய தரப்பு கோரி வருகிறது.

# இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!



(கொழும்பு)
ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் - பொகவந்தலாவ பிரதான வீதியில் டிக்கோயா வனராஜா பிரதேசத்தில் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நோர்வூட்டிலிருந்து ஹட்டன் நோக்கி சென்ற தனியார் பஸ் ஒன்றும் ஹட்டனிலிருந்து நோர்வூட்டிற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஊழியர்களை ஏற்றி சென்ற பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியதில் 4 பேர் படுங்காயத்திற்குள்ளாகி டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் 30 நிமிடங்கள் போக்குவரத்து தடைப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது. ஹட்டனிலிருந்து நோர்வூட்டிற்கு சென்ற பஸ் வேகமாக வந்ததாலையே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக ஹட்டன் பொலி ஸார் தெரிவித்தனர்.

மேற்படி பஸ்ஸின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புலனாய்வுப் பிரிவினரை அச்சுறுத்திய வாஸ் குணவர்த்தனவின் வழக்கு ஒத்தி வைப்பு

(கொழும்பு)
புலனாய்வுப் பிரிவினரை அச்சுறுத்தியதாக தெரிவித்து கொழும்பு வடக்கின் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தனவிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சானி குணவர்தன உள்ளிட்ட அதிகாரிகளுக்கு வாஸ் குணவர்தன கொலை மிரட்டல் விடுத் ததாகத் தெரிவித்து சட்ட மா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்வதாக பிரதிவாதி தரப்பினர் அறிவித்திருந்த போதிலும், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அதற்கு இணங்கவில்லை. பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹமட் சியாம் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் வாஸ் குணவர்தன உள்ளிட்ட சிலருக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்த விசாரணைகளின் போது பொலிஸ் உத்தியோகத்தர்ளை வாஸ் குணவர்தன அச்சுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. சானி நீ தெரிந்துகொள் நான் ஓர் கொலையாளி, உங்களால் என்னை தொடர்ச்சியாக உள்ளே வைத்திருக்க முடியாது.

நான் வெளியே..சென்றால் உங்களுக்கு என்ன செய்வேன் என பார்த்துக்கொள். என வாஸ் குணவர்தன அச்சுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சர் எஸ். பியின் சகோதரர் சாலிய காலமானர்

(கொழும்பு)
மத்திய மாகாணசபையின் முன்னாள் தவிசாளரும் இலங்கையின் உயர் கல்வி அமைச்சர் எஸ் பி திஸா நாயக்கவின் சகோதரருமான சாலிய திஸாநாயக்க காலமானார்.

சுகவீனம் காரணமாக அவர் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இறக்கும் போது அவருக்கு 49 வயதாகும். நேற்று முன்தினம் இரவு பேராதனை போதனா வைத்தியசாலையில் வைத்து சாலிய திசாநாயக்க காலமானதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.
இறுதி கிரியைகள் பற்றிய திகதிகள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டென்மார்க்கில்

கண்டிக் கத்தக்கதென, தங்களின் ஆதங்கங்களை முன்வைத்தார்கள்.

இப்படி ஒரு இனப்படுகொலை இதுவரை நிகழ்ந்ததில்லை. இது மிகவும் கண்டிக் கத்தக்கதென, தங்களின் ஆதங்கங்களை முன்வைத்தார்கள்.

ஆயிரக்கணக்கான மக்களை முள்ளி வாய்க்கால் என்ற குறுகிய நிலப் பரப்புக்குள் சிக்கவைத்து, சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்ட ஆயுதங்களை திட்டமிட்ட ரீதியில் பயன்படுத்தி, சாட்சிகள் அற்ற போரை நடத்தி தமீழ் மண்ணில் ஒரு இனவழிப்பை சிங்களப் பேரினவாதம் அரங்கேற்றியது.

தொடர்த்தும் எமது தாயக பூமியில் சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு மிகவேகமாக சிங்கள குடியேற்ற ங்களையும் நடாத்தி, தமிழர் நிலப்பரப்பில் எமது கலாசார, பண்பாட்டு சின்னங்களை அழித்தும் பௌத்த சிலைகளை நிறுவியும், சிங்கள பெயர் மாற்றங்களை செய்தும் எமது தாயக பூமியை ஆக்கிரமித்து வருகின்றது.

இதைத் தடுப்பதற்காக டென்மார்க் அரசு உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இந்த நிகழ்வில் டெனிஸ் மக்களுக்கு டெனிஸ் மொழியில் திசைகள் இளையோர் அமைப்பினர்கள் விளக்கம் கொடுக் கப்பட்டதுடன், துண்டு பிரசுரங்கள் வழங்கி தமிழ் மக்கள் மீது நடத்தப்படுக் கொண்டிருக்கின்ற இனவழிப்பை விளங்கப் படுத்தியுள்ளார்கள்.

## மகிந்தவின்

பண்டாரநாயக் கவினருக்கு ஆதரவான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை தொடர்ந்தும் ராஜபக்ஷவினரின் இருப்புக்காக கட்சியில் தக்க வைத்திருப்பதே மகிந்த ராஜபக்ஷவின் தந்திரத்தின் நோக்கம் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும், விமுக்தி குமாரதுங்க அல்லது யசோதரா ஆகியோரில் எவரும் அரசியலுக்கு வர மாட்டார்கள் என பத்திரிகை ஒன்றின் நேர்காணலில் கருத்து தெரிவித்த சந்திரிக்காவின் மூத்த சகோதரியான சுனேத்ரா பண்டாரநாயக்க கூறியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா மீண்டும் அரசியலுக்கு வருவதை அவரின் இரண்டு பிள்ளைகளும் எதிர்த்து வருவதாகவும் சுனேத்ரா குறிப்பிட்டிருந்தார்.

இதனடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யோசனை ஒரேயடியாக நிராகரிக்கப்பட்டு விட்டதாக பேசப் படுகிறது.

விமுக்தி குமாரதுங்க, கால்நடை மருத்துவ நிபுணராக இங்கிலாந்தி பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை பாரிய

மாணவியரும் கர்ப்பிணித் தாய் மார்களுமே அதிகளவில் இந்த நோயினால் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக் கப்படுகிறது. அனிமியாவில் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகளுக்கு பிறக்கும் குழந்தைகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.ஞாபகசக்தி. குறைபாடு, குறைந்த எடை, வளர்ச்சிப் பிரச்சினை என பல்வேறு நோய்களுக்கு இரும்புச் சத்து குறைபாடு ஏதுவாகின்றது என

## கழுதையை விட

கட்சியின்

தலைவருக்கு தேவையான வகையில் நியமிக்கப்பட்டவர்தான் அஸ்வர். எவர் பின்னால் சென்றாவது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பெற்று வந்தையே அவர் எப்போதும் செய்து வந்தார். எந்த தேர்தலிலும் அவர் ஒருபோதும் போட்டியிட்டதில்லை.

தலைவர்களுக்கு தேவையான வகை யில் நியமிக்கப்படும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்காக பேசும் எம்மை உறுப்பினர்கள் பேசும் போது குறுக்கீடு செய்து வருகின்றனர்.

அதற்காகவே இவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்படுகிறது. நாடாளு மன்றத்தில் மக்கள் குறித்து சிந்தித்து கேள்விகளை எழுப்பும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஸ்வர் உண்மை யிலேயே பெரும் தடையாக இருந்து வருகிறார்.

புத்தளத்தில் இருக்கும் கழுதை களுடன் ஒப்பிடும் போது கழுதைகளில் இருக்கும் அறிவு குற்றந்த கழுதைக்கு கூட அஸ்வரை விட அறிவு இருக்கும் எனவும் சுனில் அந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

## மோடியின் ஆலோசகர்

பாரத்தசாரதி என்ற அதிகாரி சிறப்பு பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அதைப் போல பிரதமர் நரேந்திர மோடியும் தமது சிறப்பு பிரதிநிதி ஒருவரை இலங்கை விவகாரங்களுக்கு என நியமிக்கப்பட இருப்பதாக செய்திகள் வெளியாகி இருந்தன. இந்நிலையில் ஒட்டுமொத்த வெளியுறவு விவகாரங்களுக்கு என தனியே ஒரு ஆலோசகரை நியமிக்க பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

தற்போது அமெரிக்காவுக்கான இந்திய தூதராக இருக்கும் சுப்பிரமணியம் ஜெய்சங்கரை மோடி தமது ஆலோச கராக நியமிக்கவும் வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது. ஓரிரு நாட்களில் இதற்கான முறையான அறிவிப்பு வெளியாகலாம் என டெல்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுப்பிரமணியன் ஜெய்சங்கர் டெல்லியில் பிறந்தவர். மத்திய அரசு ஊழியரும் அரசியல் விமர்சகருமான கே.சுப்பிரமணி யத்தின் மகனே ஜெய்சங்கர் . அவரது சகோதரர் சஞ்சய் சுப்பிரமணியன் வரலாற்று ஆய்வாளர்.

1977ஆம் ஆண்டு இந்திய வெளியுறவுத் துறையில் இணைந்தார் சுப்பிரமணியன் ஜெய்சங்கர். 1979 ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு வரை சோவியத் யூனியனுக்கான இந்திய தூதரகத்தில் அதிகாரியாக பணியாற்றினார்.

பின்னர் இந்திரா காலத்தில் இலங்கைக்கான சிறப்பு பிரதிநிதியாக இருந்த ஜி. பார்த்தசாரதிக்கு சிறப்பு உதவியாளராக இருந்தார். அதைத் தொடர்ந்து 1989- 90ஆம் ஆண்டு இலங்கையில் நிலை கொண்ட இந்திய அமைதிப்படையின் அரசியல் ஆலோசகராக இருந்தார்.

அதன் பின்னர் ஜப்பான், சீனா நாடுகளுக்கான தூதராக இருந்த சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தற்போது அமெரிக்காவுக்கான இந்திய தூதராக பணியாற்றுகிறார் என்பது குறிப்பி டத்தக்கது.

## இரணைமடு

குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தை கற்றல் செயற்பாடுகள் செயற்பாடுகளுக்கு இடையூறாக இராணுவம் மற்றும் வெளியார் பயன்படுத்துவதை தடுக்க வேண்டுமென வடமாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை விடுத்த வேண்டு கோளை அடுத்து,

இனி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தை இராணுவம் உட்பட யாரும் கற்றல் செயல்பாடுகளை குழப்பும் வகையில் பயன்படுத்துவதை அனுமதிக்க வேண்டாமென கிளிநொச்சி வலய கல்வி பணிப்பாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த செய்திகள் ஊடகங்களில் ஒலி, ஒளி வடிவில் வெளிவந்திருந்தன. அந்த செய்திகளில் திரிபுபடுத்தல் இருக்கவில்லை. நேற்று கூட்டம் ஆரம்பமானபோது கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தை கற்றல் செயல்பாடுகளுக்கு இடையூறாக இராணுவம் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டுமென தான் மீளவும் வலியுறுத்துவதாக தெரிவித்தார்.

தான் யாருக்காகவும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லையெனவும் ஒரு நல்ல காரியம் நடக்க ஒத்துழைக்க வேணடுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதுபோல நேற்றுமுன் கூட்டத்தில் சமூர்த்தி பயனாளிகள் தெரிவில் தவறுகள் நேர்ந்துள்ளதையும் பணக்காரர்கள் முதலாளிகளுக்கும் சமூர்த்தி வழங்கப்பட்டிருப்பதாக பா.உறுப்பினர் சந்திரகுமார் கூறியதற்கான ஒலி, ஒளி ஆதாரங்களை ஊடகங்கள் வைத்துள்ளன என்பதால் அச்செய்திகளிலும் திரிபுகள் இருக்க வாய்ப்பில்லை.

பொறியிலாளர் பாரதிதாசன் விவசாயிகளிடம் வாங்கிக்கட்டினார்.

இரணைமடு விடயத்தில் முதல்வர் முக்கிய கவனம் செலுத்தி கருத்துரைத்தார். நேற்றைய கூட்டத்தில் பிரதானமாக தண்ணீர் தொடர்புபட்ட பகுதியே ஆராயப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்துக்கான இரணைமடுவின் நீர் விநியோகத் திட்டத்தின் சூத்திரதாரிகளில் பிரதானமானவராக கருதப்படுகின்ற தேசிய நீர் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர் பாரதிதாசன் கிளிநொச்சி மாவட்டத்தின் தமது சபையால் நடைமுறைப்படுத்தப்படும் நீர் விநியோகங்கள் நிலுவையில் இருக்கும் நீர் விநியோக திட்டங்கள் தொடர்பாக விரிவான புள்ளிவிபரங்களுடன் நீண்ட நேரமாக விளக்கமளித்ததை தொடர்ந்து.

சரியான தருணத்தில் வாய் திறந்த இணைத்தலைமையும் முதலமைச் சருமான விக்னேஸ்வரன் பொறியியலாளர் பாரதிதாசனிடம் யாழ்ப்பாணத்துக்காக இரணைமடு நீர்விநியோகம் தொடர்பாக பல்வேறு விளக்கங்களை கோரினார்.

அதில் யாழ்ப்பாணத்தில் , இருந்தே யாழ்ப்பாண மக்களுக்கான நீர் விநியோகம் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் கிளிநொச்சியில் கடும்வறட்சி ஏற்பட்டு இரணைமடுவில் நீர் பற்றாக்குறை எற்படுகின்றபோது அதற்கான மாற்றுத்திட்டம் உள்ளடங்குகின்றன.

முதலமைச்சரின் கேள்விகளுக்கு அவை ஏற்றுக்கொள்ளும்படியான விளக்கங்களை பொறியியலாளர் பாரதிதாசன் வழங்கவில்லை. அவரு டைய கருத்துக்கள் விளக்கங்கள் அனைத்தும் விவசாயிகளின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காது திட்டம் நிறைவேற்ற அடம் பிடிப்பதாகவே இருந்தது. இது விவசாய பிரதிநிதிகளுக்கு கடும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

சிறீதரன் மீண்டும் தீர்க்கமான முடிவு

இரணைமடு நீர்விநியோகம் தொடர்பாக தொடர்ந்து குரல் கொடுத்துவரும் பா.உறுப்பினர் சபையில் கருத்துவெளியிட்டபோது,

கிளிநொச்சி மக்களின் நீர் தேவை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பின்பே ஏனைய எதுவெனினும் என முடிவாக கூறிவிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 21ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை இரணைமடு ந°ரின் க°ழ் செய்யப்படுவதாகவும் குளம் திருத்தப் படும் பட்சத்தில் மேலும் 15 ஆயிரம் ஏக்கர் பயிர் செய்யமுடியுமென நீர்ப்பாசன பொறியியலாளர் சுதாகரனின் கருத்துக்களை அடிப்படையாக கொண்டு மேலும் கருத்துத் தெரிவித்த பா.உறுப்பினர் சி.சிறீதரன்,

முதலில் மேற்படி நீர்விநியோத்திற்கான திட்டநிதியை பயன்படுத்தி முதலில் இரணைமடுக்குளத்தின் அணைகள் உட்பட குளத்தை திருத்தி அதன் பிறகு ஏற்படும் நீர் தொடர்பான யதார்த்தமான சூழலை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கான நீர் விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளலாமென கருத்து வெளியிட்டார்.

## மோடியின்

அதற்கான 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை முழுமையான அமுல்படுத்துமாறும் மோடி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கூறியதாக இந்திய வெளிவிவகார செயலாளர் தெரிவித்திருந்தார்.

மோடி கூறியதை இலங்கை செய்யுமா இல்லையா என்பது வேறு பிரச்சினை.

எனினும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியாவின் உதவியை பெற வேண்டுமாயின் இலங்கை நிறைவேற்ற வேண்டிய அடிப்ப டையான நிபந்தனையை இந்தியாவின் புதிய பிரதமர் தெளிவாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் இந்திய பிரதமர் மோடிக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளின் பின்னர், இந்தியாவின் ஆங்கில தொலை க்காட்சி ஒன்று ஜனாதிபதி மற்றும் யாழ் மாநகர முதல்வர் ஆகியோருடன் நேர்காணலை நடத்தியது.

இதன் போது மோடி, ஜனாதிபதி இடையிலான சந்திப்பில் சொல்ல ப்பட்ட சில விடயங்களையும் கூறினார்.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களுடன் 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை முழுமையான அமுல்படுத்துமாறு மோடி, ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டதாக யாழ் மாநகர முதல்வர் தெரிவித்திருந்தார்.

மோடி இப்படியான கோரிக்கையை விடுத்தது இரகசியமான ஒன்றல்ல. இதனை முழு இந்தியா மட்டுமல்ல முழு உலகமும் அறியும் எனவும் தயான் ஜயதிலக்க குறிப் பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சானியா-காரா பிளாக் ஜோடி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் இன்றைய இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் சானியா மிர்சா-காரா பிளாக் ஜோடி கனடாவின் காப்ரியேலா டப்ரோவ்ஸ்கி-போலாந்தின் அலிக்ஜா ரொசோல் ஸ்கா இணையை சந்தித்தது.

தொடக்கம் முதலே சானியா-காரா ஜோடி அசத்தலாக ஆடியது. இந்த ஜோடி முதல் செட்டை 6-1 என்ற கணக்கிலும், இரண்டாவது செட்டை 6-2 என்ற கணக்கிலும் எளிதில் கைப்பற்றி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றது. காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சானியா-காரா ஜோடி செர்பியாவின் ஜெலினா ஜாங்கோவிக்-ரீயாவின் அலிசா க்ளேபனோவா ஜோடியுடன் மோதவுள்ளது.

## குஜராத் கிரிக்கெட் சங்க தலைவர் பதவி நரேந்திரமோடி ராஜினாமா



பிரதமர் நரேந்திரமோடி குஜராத் மாநில கிரிக்கெட் சங்க தலைவராக இருக்கிறார். அவர் அந்த பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

2009ம் ஆண்டு மோடி குஜராத் கிரிக்கெட் சங்க தலைவராக ஒரு மனதாக தேர்வு ஆகி இருந்தார்.

வருகிற 13ந் தேதி நடைபெறும் கூட்டத்தில் புதிய தலைவர் தேர்வு நடைபெறும். குஜராத் மாநில கிரிக்கெட் சங்க புதிய தலைவராக அமித்சா நியமிக்கப்படலாம். அவர் தற்போது துணைத் தலைவராக இருக்கிறார்.

## ஐபிஎல் கோப்பைக்கு ரூ.15 கோடி



ஐ.பி.எல். கோப்பையை வெல்லும் அணிக்கு ரூ.15 கோடி பரிசளிக்கப்படும் இறுதிப் போட்டியில் தோற்று 2வது இடத்தை பிடிக்கும் அணிக்கு ரூ. 10 கோடி கிடைக்கும்.

குவாலிபையர்ஸ் போட்டியில் தோற்ற சென்னை சூப்பர் கிங்ஸ், எலிமினேட்டர் போட்டியில் தோற்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தலா ரூ. 7 கோடி கிடைக்கும்.

மொத்தம் ரூ.40 கோடி பரிசளிக்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 23 | | 31 |
| 05 | | 05 |
| 1928 | | 2014 |



அமரர்

**திருமதி. சூசை இருதயம்**

வட்டக்கண்டல், மன்னார்

**அமரர் திருமதி. சூசை இருதயம் அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்**

குமார் குடும்பத்தினர்
கறுக்காய்க்குளம்
வட்டக்கண்டல்

## உலகக் கோப்பை ஹாக்கி முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றி



உலகக் கோப்பை ஹாக்கி போட்டியின் முதல் லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும் மலேசியாவும் மோதின. இதில் ஆஸ்திரேலிய அணி 4-0 என்ற கோல் கணக்கில் எளிதாக வென்றது.

ஆஸ்திரேலிய வீரர்கள் ஒட்டு மொத்தமாக பதினோரு ஸாட்களை அடித்தனர். அதில் கோல் போஸ்ட்டை நோக்கி ஆறு ஸாட்கள் அடிக்கப்பட்டன. மற்ற ஐந்து ஸாட்கள் வைடாக அடிக்கப்பட்டன. கோல் போஸ்ட்டை நோக்கி சென்ற ஆறு ஸ்ாட்களில் நான்கு கோல்களை அடித்து அசத்தினர் ஆஸ்திரேலிய வீரர்கள்.

அந்த அணியின் க்ளென் டர்னர் ஆட்டத்தின் 25வது நிமிடத்தில் ஒரு கோலும், 54வது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தார்.

மலேசிய அணி 2 ஸாட்களை மட்டுமே அடித்தது. அதில் ஒரு ஸாட் கோல் போஸ்ட்டை நோக்கியும் மற்றொரு ஸாட் வைடாகவும் சென்றது. ஆனால் அந்த அணி வீரர்கள் கோல் எதுவும் அடிக்கவில்லை.

## மகனின் ஆசையை நிறைவேற்றிய ஷேவாக்




சேவாக் நேற்றைய ஆட்டத்தில் அதிரடியாக விளையாடி ரசிகர்களை மகிழ்வித்தார். அவர் சென்னை அணியின் பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்தார். 58 பந்தில் 12 பவுண்டரி, 8 சிக்சருடன் அவர் 122 ரன் எடுத்தார். இந்த போட்டித் தொடரில் 2வது சதம் இதுவாகும்.

இந்த அதிரடியான ஆட்டம் மூலம் மகனுக்கு கொடுத்த வாக்குறுதி, ஆசையை ேவாக் நிறைவேற்றியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:

நான் ரன் எடுக்காமல் மோசமாக விளையாடுவதால் எனது மகனை அவனது சக மாணவர்கள் கிண்டல் செய்து உள்ளனர். நான் அவனிடம் சிறப்பாக விளையாடி ரன் குவிப்பேன் என்று உறுதி அளித்தேன்.
அதன்படி எனது ஆட்டம் அதிரடியாக இருந்து ரன்களை குவித்தேன். எனது ஆட்டம் மூலம் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது.

### சங்க்காராவின் அதிரடியால்

## வீழ்ந்தது இங்கிலாந்து




இலங்கை மற்றும் இங்கிலாந்துக்கு இடையேயான நான்காவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி லாட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.
இதில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பை தெரிவு செய்தது, இதனை அடுத்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 300 ஓட்டங்கள் குவித்தது.

இலங்கை சார்பில் சங்ககரா 112 ஓட்டங்களும், டில்சான் 71ஓட்டங்களும், இங்கிலாந்து சார்பில் கர்ணி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனை அடுத்து 301 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 293 ஓட்டங்கள் எடுத்தன.

இங்கிலாந்து சார்பில் பட்லர் அதிரடியாக விளையாடி 74 பந்துகளில் 121 ஓட்டங்கள் எடுத்தார், போபாரா 51ஓட்டங்கள் எடுத்தார். இலங்கை அணியின் சார்பாக மலிங்கா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை சமன் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள [illegible]கத்தால் 01.06.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.